# தென்மர்
Thenmar

தென்மராட்சி மண்ணுக்கு மாண்பேற்றும் திங்கள் இதழ்

03

கார்த்திகை மார்கழி 2021


# சாவகச்சேரியில் கழிவுகளை மீள் உருவாக்கும் மத்திய நிலையத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு




**(த.சுபேசன் - ஊடகவியலாளர்)**

சாவகச்சேரியில் கழிவுகளை மீள் உருவாக்கும் மத்திய நிலையத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் 02/11/2021 செவ்வாய்க்கிழமை காலை 11மணிக்கு தனங்கிளப்பு வீதியில் அமைந்துள்ள நகரசபையின் கழிவகற்றல் மையத்தில் இடம்பெற்றது.

சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக செவணத நிறுவன முகாமையாளர் அப்துல் ரணசிங்க, வேஸ்ட் வின் நிறுவன அதிகாரி நிமல் பிரேமதிலக ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த வளங்கள் சுத்திகரிப்பு நிலையமானது ஜேர்மன் நாட்டின் யனிரீ நிறுவன நிதி உதவி

10

## தென்மராட்சி கல்வி வலயத்தில் நவீன திறன் வகுப்புகளுக்கான நிதி வழங்கி வைப்பு




தென்மராட்சி நிறுவனங்களின் தென்மராட்சி ஒன்றியம், இரட்ணம் பவுன்டேசன், imho (USA) உடன் இணைந்து தென்மராட்சியில் உள்ள பாடசாலைகளை நவீன வகுப்பறை கொண்ட பாடசாலைகளாக மாற்றும் திட்டத்தின் முதற்கட்டமாக 10 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு முதற்கட்ட நிதியாக 2,000,000 ரூபாய்களை கனடா தென்மராட்சி நிறுவனம், அதன் தலைவர் ச. தேவதாஸ் சக உறுப்பினர்களுடன் இணைந்து தென்மராட்சி நிறுவனங்களின் சர்வதேச ஒன்றியத்தின்

10




## மட்டுவில் மோகனதாஸ் நிலையத்திற்கு ஐரோப்பாவில் நிர்வாகம்!

மட்டுவில் மோகனதாஸ் ச.ச. நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் சுவிஸில் நடைபெற்றது. ஐரோப்பாவில் நேரிலும், மெய்நிகர் வழியாகவும் உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப் பித்தனர். புதிய நிர்வாகம் மற்றும் ஐரோப்பிய ஆலோசனை குழுவும் தெரிவு செய்யப்பட்டது. நிர்வாகிகள் விவரம்: -

தலைவர் - குணரத்தினம் பிரஜிப் (சுவிஸ்), உப தலைவர் - சின்னராசா தயாளன்(ஜெர்மனி), செயலாளர் - சிவராஜா சந்திரகாந்தி (சந்திரா, சுவிஸ்) உபசெயலாளர் - விஜயகுமார் துசாந்தன் (நந்தன், பிரான்சு) பொருளாளர் - இராசேந்திரம் அருந்தவச்செல்வன் (சுவிஸ்).

## சாவகச்சேரி மின்மயானத்திற்கு 5லட்சம் ரூபா நன்கொடை!




சாவகச்சேரி நகரசபையினால் நிர்மாணிக்கப்படும் மின்தகனமயானத்திற்கு நிதி பங்களிப்பு செய்வதற்கு நன்கொடையாளர்கள் தாராள பிரபுகளாக தமது உதவி தொகையை வழங்க முன்வந்துள்ளனர். முதற்கட்டமாக கனடாவில் வசிக்கும் தென்மராட்சி மைந்தன் கலாநிதி அகிலன் முத்துக்குமாரசுவாமி

10







தென்மராட்சி நிறுவனம் தொடங்கிய வரலாறு 03

தென்மராட்சியின் நிலங்களும் வளங்களும்



04



மாண்புறு மட்டுவில் 06



'தவக்கோலங்கள்' சிறுகதை 06

படப்பிடிப்பு தொழில் துறை வல்லுனராகவலம் வரும் போட்டோ பாலா! 11







**Chavakachcheri Kannadippiddy electrical cemetry project**

*Bank- People's Bank Chavakachcheri*
*Ac.No-110-2-001-7-0008145*

Account open members

1)Mr.Sivabalan Namasivayam
member of the Chamber of commerce
2)Mrs.Sivamankai Ramanathan
Chairman urban Council Chavakachcheri
3)Mrs.Devarathy Sutheskaran
Principal, J/ Allarai G.T.Vidiyalayam
Member of the International federation of Thenmaradchy foundation.

# தென்மராட்சி கிராமங்களின் காரணப் பெயர்கள்



செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன்

**(சென்ற இதழின் தொடர்ச்சி)**

**இயற்றாலை**

இயற்றாலை என்பதற்கு கட்டப்பட்ட ஆலை என்ற பொருள் உள்ளது. வரணிப் பிரதேசத்தில் இந்த ஊர் உள்ளது. தாவளை இயற்றாலை என்பதில் தாவளம் என்பது மருத நிலத்து ஊர் என்ற பொருளைத் தருகிறது.

இயத்து ஆலை என்பதை சட்டி, பானை முதலிய இயத்துக்களை செய்யும்ஆலைஎனப்பொருள்கொள்வோரும் உள்ளனர்.

வரணி இயற்றாலை, மாவடி இயற்றாலை என்ற கிராமங்களும், வரணிப் பிரதேசத்திலும் உள்ளன. தாழ் வளை என்பதே - தாழ்வான பகுதி - தாவளை ஆகியிருக்கிறது.

**மீசாலை**

மீசு + ஆலை உயர்ந்த மரங்கள் உள்ள இடம் மாசாலை என்பதே மருவி மீசாலை ஆயிற்று எனக் கொள்வோரும் உள்ளனர். மீ என்பது இலுப்பையைக் குறிப்பதால் மீ + ஆலை எனப் பொருள் கொள்ளவும் வழியுள்ளது.

மீ என்பதற்கு மேற்கு என்ற பொருளைக் கொண்டு மேற்குச் சாலை என்ற பொருளை கதிர் தணிகாசல் குறிக்கிறார்.

மீசாலை மாம்பழத்திற்குப் பிரசித்தமானது. இங்கு வெள்ளை மாவடி, கரும்பிமாவடி (கறுப்பு மாவடி / கரும்பு மாவடி) பாண்டிக் கேணி (பாண்டிமா) என்ற இடங்கள் இங்கு உள்ளன.

**கோயில் குடியிருப்பு**

சாவகச்சேரி நகரை அண்மித்து உள்ள ஊர். கோவிலுக்குச் சேவகம் செய்தவர்கள் குடியேறியமையால் இப் பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

**கொயிலாமனை**

கொடிகாமம் பிரதேசத்தில் உள்ள ஊர் ஆகும். கோயில் + ஆர் + மனை என்பதே கோயிலார்மனை என ஆகிக் காலப் போக்கில் கொயிலாமனை ஆகியிருக்க வேண்டும்.

**மாசேரி**

வரணிப்பிரதேசத்தில் உள்ள ஓர் ஊர். பெரிய குடியிருப்பு என்ற பெயரில் மா + சேரி = மாசேரி என்று ஆகியிருக்க வேண்டும். கரம்பைக்குறிச்சி

குறிச்சி என்பது சேரநாட்டிற்குரிய சொல் (குறிச்சி, குறிஞ்சி) கரம்பைச் செடி (Carissa Sprindrum) காணப்பட்டதனால் குறிப்பிடுகின்றார்கள்.

**இடைக்குறிச்சி**

வரணி , தாவளை, இயற்றாலை ஆகிய கிராமங்களுக்கு இடைப்பட்ட குடியிருப்புப் பகுதி ஆதலால் இப்பெயர் பெற்றதென இ.பாலசுந்தரம் குறிப்பிடுகின்றார்.

**மன்னன் குறிச்சி**

மிருசுவில் கிராமத்தில் ஒரு பகுதி ஆகும். இவ்விடத்தில் அரச மாளிகை இருந்ததாக ஊரவர்கள் கருதுகின்றனர். எனினும் அதற்குரிய ஆதாரங்கள் கிடைத்ததாகத் தெரியவில்லை.

**சாவகச்சேரி**


சாவகர் + சேரி = சாவகச்சேரி. சாவகர் என்பது சாவா, சுமாத்திரா ஆகிய நாடுகளைக் குறித்தன.

தமிழகத்தோடு வணிகம் செய்த சாவகர் இங்கு வந்து குடியேறிருக்கலாம்.

சாவாகச்சேரிக்கும், சாவகத்துக்கும் உள்ள தொடர்பு பற்றி யாழ்ப்பாணச் சரித்திரம் பின்வருமாறு கூறுகிறது. 22ம் குலத்துங்கசிங்கை ஆரியன் 13 ஆம் நூற்றாண்டில் யாப்பகூவாவைக் கைப்பற்றி அழித்த போது சிறையாகப் பிடிக்கப்பட்ட யாவகர்களே சாவாகச்சேரியில் குடியேற்றப்பட்டனர். இவர்களை சங்கிலி மன்னன் சாவாங் கோட்டையில் இருந்தும், சாவகச் சேரியில் இருந்தும் துரத்தினான் எனக் கூறப்படுகின்றது.

சாவகர் - முஸ்லிம்கள் 1871 இல் தென்னிந்தியாவின் காயல் பட்டினத்தில் இருந்து வந்து குடியேறியோர் என கதிர் தணிகாசலம் குறிப்பிடுகின்றார்.

(முற்றும்)

தென்மர்
Thenmar

தாயகம் - புகலிடம்
உறவுப்பாலம்

வெளியீடு :
தென்மராட்சி நிறுவனங்களின்
சர்வதேச ஒன்றியம்

முகவரி :
50 Rue du Mont Cenis
75018 Paris
France

மின்னஞ்சல் :
thenmar66gmail.com

தொலைபேசி இல:
0033 6 50 65 05 11
0033 6 11 14 03 43
001 41 65 59 57 93

ஆசிரிய பீடம்

ஊடக இணைப்பாளர்
க. சுபாஸ்

பிரதம ஆசிரியர்
என். கே. துரைசிங்கம்

ஆசிரியர் குழு
- மு. செல்வராணி
- வி. சிவராஜா
- என். கமலாகரன்
- ஆர். சத்தியசீலன்

ஆலோசகர்கள்
- க. அருந்தவராசா
- ச.லலீசன்
- கு. உதயகுமார்
- வி. திவ்வியராஜன்





தென்மர் Thenmar

# நமது கருத்து

## மகத்தான மண் தென்மராட்சி

தென்மராட்சி வளங்களினால் மகிமை பெற்ற மண் விவசாயம்,வர்த்தகம்,கைத்தொழில் (சிறு) அறுவடையே மக்களின் வாழ்வாதார தேவைகளை சமாளிக்க போதுமானதாக இருக்கிறது.

மண் வளமும்,மனித வளமும் இணைந்தால் வாழ்வியல் தேவைகள் பூர்த்தியாகும்.

மா,பலா,வாழை மரங்களின் முக்கனிகளும் பூத்துக்குலுங்கும் மண். தென்னை, பனை வளங்கள் பயன் தரும் மண்.தென்மராட்சியின் நிலங்களும் வளங்களும் என்னும் கட்டுரையில் இவ் விடயம் தொடர்பாக விவரிக்கப்பட்டுள்ளது.

நால்வகை நிலங்களுள் மூவகை நிலங்களை தன்னுள்ளே கொண்ட மண் தென்மராட்சி. மருதம், முல்லை, நெய்தல் என பெரும்பகுதி கொண்ட மகத்தான மண்.

இதனால் மனிதன் உயிர் வாழ்வதற்கான வாழ்வாதாரம் இங்கே கிடைக்கிறது. என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில்,ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்என்ற கவிஞரின் வரிகள் தான் நினைவிடை எழுகிறது.

தென்மராட்சி பல சிறப்புகளை உடைய மண். அதேபோல் அதன் நிலமும் வளமிக்க மண்.

போர் காலத்தில் இடம்பெயர்ந்து வந்த மக்களுக்கு உணவு,உடை,உறையுள் அளித்த மண் விருந்தோம்பல் உட்பட பல விடயங்களில் தென்மராட்சிக்கு நிகரில்லை.

தென்மராட்சியில் மருதநிலம் முதன்மை வாய்ந்த நிலையில் காணப்படுகிறது.இந்த மண்ணின் எப்பகுதியை எடுத்துக்கொண்டாலும் மருத நிலமாக காணப்படுவதை அவதானிக்கலாம்.

சாவகச்சேரி, தனங்கிளப்பு, சரசாலை, மட்டுவில், மிருசுவில், அறுகுவெளி, உசன், எழுதுமட்டுவாள், கைதடி, நாவற்குழி, மறவன்புலவு போன்ற இடங்கள் வயல் நிலங்களாக காணப்படுகின்றன.

சரசாலையின் வடக்கேயும், மேற்கேயும் வயல் நிலங்களை தாண்டி சிறுகாடுகளாக காணப்படுகின்றன. சிறு விலங்கினங்கள் வாழ்கின்றன.

நெய்தல் நிலம் நாவற்குழி, கேரதீவு, கோயிலாக்கண்டி,கச்சாய் போன்ற இடங்களை குறிப்பிடலாம் .மீன் பிடித்தல்,மணல் அகழ்தல் ஆகிய தொழில்கள் இடம்பெறுகின்றன.

சரசாலை, மட்டுவில் மருத நிலங்களை அடுத்து மேற்கு பக்கமாக நெய்தல் நிலம் காணப்படுகிறது. கோடைக்காலத்தில் கடனீரேரியில் நீர் வற்றும் போது உப்பு விளைச்சல் தானாகவே விளையும் இதே போன்று கைதடி பரவை கடனீரேரியிலும் உப்பு விளையும்.

தென்மராட்சியிலுள்ள மா, பலா, வாழை, தென்னை, பனை என்பன வருமானம் ஈட்டித் தரும் பயிர்களாக விளங்குகின்றன.

முல்லை நிலம் காடும் காடுசார்ந்த நிலையில் சிறு காடுகளாக காணப்படுகின்றன.சரசாலைக்கு வடக்கேயும் ,மேற்கேயும் வயல் நிலங்களை தாண்டி சிறு காடுகள் இருக்கின்றன.மந்துவில், வரணி பிரதேசங்களிலும் முல்லை நிலம் காணப்படுகின்றன.

தென்மராட்சி மூவகை நிலத்துடன் பல வளங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள மகத்தான மண்.



# தென்மராட்சி நிறுவனம் தொடங்கிய வரலாறு

## முக்கியஸ்தர் நேர்காணல்



தொண்டு செம்மல் தூயவர் துரைராசா

தாய் மண்ணில் இனம்,மொழி,சமூகம் என தொண்டாற்றிய பலர் புலம்பெயர்ந்த பின்னரும் தஞ்சமடைந்த நாட்டிலும் பணியை தொடர்கின்றனர். இவர்களை வாழ்நாள் சேவையாளராக அடையாளம் கண்டு மதிப்பளிக்கிறோம்.தென்மராட்சி மண்ணில் சமுதாய பணியினால் மக்களிடத்தில் அழியாத இடத்தை பெற்றவர் திரு வி.சு. துரைராசா. கிராமிய மட்ட அமைப்புகளான சன சமூக நிலையம்,கிராம அபிவிருத்தி சங்கம் என பல அமைப்புகளின் செயற்றிட்டங்கள் ஊடாக தனது சமூக அக்கறையை. வெளிக்காட்டியவர்.சாவகச்சேரி நாடாளுமன்ற உறுப்பினர் வ.ந.நவ ரத்தினம்அவர்களின்செயலாளர்ஆனதினால்தென்மராட்சியிலுள்ள அனைத்து கிராமங்களின் அபிவிருத்தி தேவைகளை அறிந்தவர் அதனால் இன்று கூட அதனை விரல் நுணியில் வைத்திருப்பவர்.

சிவில் நிர்வாகம் செயலிழந்த நாட்களில் துரைராசா அண்ணா உத்தியோகபூர்வமற்ற அரச அதிகாரியாக இயங்கியவர்.அப்போதெல்லாம் அவரது நுணாவில் இல்லத்தில் மக்கள் நிரம்பி வழிவார்கள் தமது குறைகளை கூறி தீர்வை பெறுவார்கள்.காணி,வேலி,குடும்ப பிரைச்சினை என அனைத்தையும் தீர்த்து வைப்பார். இராணுவம், இயக்கம் என பிடித்து சென்றவர்களை கூட சாதுரியமாக அதிகாரத்திலுள்ளவரிடம் பேசி விடுவித்தவர்.

அதனால் அவரை நல்லவர்,வல்லவர்,தூயவர் என்று கொண்டாடினார்கள். அறவழி போராட்டக் குழுவின் ஆரம்ப கால தலைவர், தென்மராட்சி நிறுவன செயற்பாட்டாளர்.கனடா மண்ணிலிருந்து இன்றும் பல பணிகளை தொடரும் துரை அண்ணா அவர்களை தென்மர் இதழுக்காக நிகழ்த்திய நேர்காணல்.

**கேள்வி -** தென்மராட்சி நிறுவனமும் அதன் தோற்றம் செயற்பாடு தொடர்பாக விளக்கவும்.

**பதில் -** 1998ஆம் ஆண்டு சாவகச்சேரியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் காலஞ்சென்ற திரு.வி.என்.நவரத்தினம் அவர்களின் தலைமையில் உருவாக்கப்பட்ட நிறுவனம் தான் தென்மராட்சி நிறுவனம் ஆகும். தலைவராக திரு.வி.என். நவரத்தினம் அவர்களும் செயலாளராக முன்னாள் உதவி அரசாங்க அதிபர் திரு.எஸ். முருகவேள் அவர்களும் தேர்வு செய்யப்பட்டார்கள். அந்த நிர்வாகத்தின் முக்கிய பதவியில் தெரிவு செய்யப்பட்டேன். தொடர்ந்து அந்த நிறுவனத்தின் செயற்பாடுகள் ஆரம்பமாகியது. முதல் பணியாக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் அப்போதைய துணைவேந்தர் திரு. வித்தியானந்தன் அவர்களை திரு.வி.என். நவரத்தினமும் நானும் திருநெல்வேலியிலுள்ள பல்கலைக்கழகத்தில் சந்தித்தோம்.

தொடர்ந்து யாழ்ப்பாண பல்கலைக் கழத்தின் புவியியல் துறைத் தலைவர் போராசிரி யர் செல்வநாயகத்தையும் சந்தித்து சாவகச்சேரித் தொகுதிக்கு ஒரு முழுமையான அபிவிருத்தி திட்டம் ஒன்றை தயாரிக்க வீட்டுக்கு வீடு ஒரு சமூக பொருளாதார ஆய்வு ஒன்றை மேற்கொள்ள முடிவு செய்தோம். ஆரம்ப பணியாக சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பணிமணியின் பக்கத்தில் ஒரு திட்ட அலுவலகம் ஒன்று திறக்கப்பட்டது. அங்கே என்னுடன் சகோதரன் க.ஜீவகதாஸ், சகோதரன் பொ. திருநாவுக்கரசு மூவரும் அந்த திட்ட பணிமனையின் முழுநேர ஊழியர்களாக நியமனம் பெற்றோம். அந்த அலுவலகத்தின் பொறுப்பாளராக என்னை நியமனம் செய்தார்கள்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலிருந்து பல விரிவுரை யா ளர்கள், போராசிரியர்கள் என தினமும் பலர் வருவார்கள். பல கூட்டங்கள் நடைபெறும். முழு மையான கேள்விக் கொத்து தயார் செய்து பலமாணவர்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலிருந்து வந்து ஆய்வு தொடங்கியது பல மாணவர்கள் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுக்கும் பிரிவு பிரிவாக தங்கள் பணிகளை ஆரம்பித்தார்கள்.

தென்கிழக்கு ஆசியாவிலேயே நடைபெற்ற வீட்டுக்கு வீடு நாடத்தப்பட்ட ஆய்வுவென மிக வும் பிரபல்யமாக பேசப்பட்ட ஆய்வாக மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. இந்த நேரத்தில் ஒரு கார் விபத்தில் பேராசிரியர் செல்வநாயகம் அவர்களை நாம் இழந்தோம். பின்பு பேராசிரியர் லூதர் ஜெயசிங்கம் அவர்கள் பொறுப்பேற்றார்கள். ஆய்வுப் பணிகள் முடிவு பெற்று, திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டது. முதலாவது திட்ட அறிக்கை முடிவானது. முதலாவது திட்ட அறிக்கை எடுத்துக் கொண்டு, திரு.வி.என். நவரத்தினம் அவர்கள் என்னையும் அழைத்துக் கொண்டு கொழும்பு அமெரிக்கன் High Commissionக்கு சென்றோம். அங்கிருந்து U.S. Aid நிறுவத்திற்கு எம்மை அனுப்பி வைத்தார்கள். தொடர்ந்து அடுத்த வாரம் U.S. Aid நிறுவனத்திலிருந்து மூவர், யாழ்ப்பாண உள்ளூராட்சி ஆணையாளர் Anton Alfret எமது திட்ட அலுவலகத்திற்கு வந்தார்கள். எங்கள் M.P அவரோடு எங்கள் A.G.A முருகவேள் எல்லோரும் வந்தார்கள். கிட்டத்தட்ட 4 மணித்தியாலம் எடுத்த கூட்டம் M.P வீட்டில் எல்லோருக்கும் மதிய உணவு கொடுக்கப்பட்டது. மாலை 4 மணியளவில் எங்கள் கூட்டம் நிறைவு பெற்றது.

எங்களுக்கு U.S. Aid குறுப் வருகையின் பின் சாவகச்சேரி பகுதிக்கு நன்னீர் திட்டம் கோடியே 65 லட்சம் டாலர் நிதி உதவி கிடைத்தது. வடமராட்சி கிழக்கு பிராந்தியத் திலிருந்து நிலத்தடி நீர் திட்டத்தின்படி மீசாலையில் பெரிய தண்ணீர் தாங்கியும் சாவகச்சேரி பிரதேசத் தின் நகரப் பகுதியை அண்டிய பகுதிகளுக்கு நீர் வழங்கும் திட்டம் திட்டம் ஆரம்பமாகி சமக்கோன் என்ற நிறுவனம் ஒப்பந்தகாரராக தொழில் தொடங் கியது நகரப் பகுதியை அண்டிய பிரதேசங்களுக்கு, பைப் எல்லாம் போட்டு வேலைகள் தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போது எமது நிறுவன சிரேஷ்ட துணைத் தலைவர் நடராசா - கருணாகரன் அவர்கள் பொறியியல் பட்டதாரியாக பட்டப்படிப்பை முடித்து முதன் முதலில் இத்திட்டத்தில் பணியாற்றியதை தற்போது நினைவு கூர விரும்புகின்றேன் தொடர்ந்து பல வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் எங்கள் திட்ட அலுவலகத்திற்கு வருவதற்கு அனுமதி கேட்டு கடிதம் அனுப்பிய வண்ணம் இருந்த கால கட்டம், சாவகச்சேரி தொகுதி ஒரு குட்டி சிங்கப்பூராக வருமென நாம் ஆசைப்பட்டுக் கொண்டிருந்த கால கட்டம் அந்த சாவகச்சேரி தண்ணீர் திட்ட பணிகளை மேற் பார்வை செய்ய அமெரிக்காவிலிருந்து வந்த “அலன் தம்பதிகள்” கடத்தல் பெரிய தொரு செய்தியாக இலங்கை பூராகவும் பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்திய சாவகச்சேரியின் அனைத்து வேலைத் திட்டங்களும் ஸ்தம்பிதம் அடைந்தது.

(தொடரும்...)

# தென்மராட்சியின் நிலங்களும் வளங்களும்



சிற்றம்பலம் ஈஸ்வரன்
ஆசிரிய ஆலோசகர்
தமிழ்மொழி
களனி கல்வி வலயம் (ஓய்வு)
மேல்மாகாணம்.

தென்மராட்சி குடாநாட்டில் நான்கு பெரும் பிரிவுகளில் ஒரு பெரும் பிரிவாகக் காணப் படுகிறது. இது மேற்கே வண்ணாத்தி கடனீரேரியையும், நாவற்குழி கடனீரேரியையும், தெற்கே கோயிலாக்கண்டி கடலினையும், கேரதீவுக் கடலினையும், கிழக்கே கச்சாய்க் கடலினையும் வடக்கே சரசாலை, வரணி, எழுதுமட்டுவாள் என்பனவும் எல்லைகளாக காணப்படுகின்றன. இவற்றுக்குட்பட்ட நிலப்பரப்பே தென்மராட்சி என அழைக்கப்படுகின்றது.

தென்மராட்சியைப் பாதுகாக்கும் தெய்வங்களாக மேற்கு, தெற்கு, கிழக்கு, வடக்கு ஆகிய நாற்றிசைகளிலும் பரிவாரத் தெய்வங்கள் காணப்படுகின்றன. அவை மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகி அம்மன் கோவில், நாவற்குழி திருவாசகக்கோவில், சாவகச்சேரி வாரிவனநாதர் சிவன் கோவில், சரசாலை வீரமாகாளி கோவில், சினகைப் பிள்ளையார் கோவில், இராமாவில் பிள்ளையார் கோவில், நுணாவில் பிள்ளையார் கோவில், மட்டுவில் முத்துமாரியம்மன் கோவில், சரசாலை முத்துமாரியம்மன் கோவில், மண்டுவில் சோலையம்மன் கோவில், அல்லாரை அம்மன் கோவில், கந்தசாமி கோவில், மீசாலை பெரிய மாவடிப்பிள்ளையார் கோவில், மட்டுவில் வேரக்கேணி கந்தசாமிகோவில், வரணி சிட்டிபுரம் அம்மன் கோவில், கெருடாவில் கந்தசாமி கோவில், இத்தியடிப்பிள்ளையார் கோவில், சாவகச்சேரி முருகமூர்த்தி கோவில், கொடிகாமம் இராமாவில் பிள்ளையார் கோவில், மட்டுவில் சிவன் கோவில், சாவகச்சேரி செருக்கல் பிள்ளையார் கோவில், மீசாலை பூதராயர் கோவில், பெருங்குளம் பிள்ளையார் கோவில், மட்டுவில் செல்லப் பிள்ளையார் கோவில் மிருசுவில் பிள்ளையார் கோவில் போன்றன முக்கியமான தெய்வங்களாக



இருந்து பாதுகாக்கின்றன.

தென்மராட்சி நால்வகை நிலங்களுள் மூவகை நிலங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. மருத நிலம், முல்லை நிலம், நெய்தல் நிலம் ஆகியனவற்றை அடக்கிய பெரும் நிலப்பகுதியாகும். இவை சிறப்பான நிலைமைகள் எனக் கூறலாம். மனித வாழ்வுக்குத் தேவையானவகையில் வளங்களைக் கொண்ட மூன்று நிலங்களும் காணப்படுகின்றன. இம் மூன்று நிலங்களும் ஒன்றுடன் ஒன்று மயங்கிய நிலையில் காணப்படுகின்றன. அது சிறப்பான விடயம் எனலாம்.

மருத நிலம் வயலும் வயல் சார்ந்த நிலமாகவும், முல்லை நிலம் காடும் காடு சார்ந்த நிலமாகவும், நெய்தல் நிலம் கடலும் கடல் சார்ந்த நிலமாகவும் காணப்படுவதாகும். அந்த வகையில் தென்மராட்சியும் இம் மூவகை நிலங்களையும் உட்படுத்திய நிலையில் காணப்படுவதால் மனித வாழ்வுக்கேற்ற ஜீவாதாரம் கொண்டதாகக் காணப்படுகிறது.

பொதுவாக தென்மராட்சிப் பிரதேசமானது இம் மூன்றையும் கொண்டிருந்தாலும், மருத நிலம் முதன்மை வாய்ந்த நிலையில் காணப்படுகிறது எனலாம். தென்மராட்சியின் எப்பிரதேசத்தை எடுத்துக் கொண்டாலும் மருத நிலம் காணப்படுவதை அவதானிக்கலாம். சாவகச்சேரி, தனங்கிளப்பு, சரசாலை, மட்டுவில், மிருசுவில், அறுகுவெளி, உசன், எழுதுமட்டுவாள், கைதடி, நாவற்குழி, மறவன்புலோ, போன்ற இடங்கள் அதிகமான வயல் நிலங்களைக் கொண்ட மருத நிலமாகக் காணப்படுகிறது.

மருதநிலம் வயல்கள், குளங்கள், குளத்தையண்டிய அல்லது குளக்கரையில் மருத மரத்தை கொண்ட நிலையிர் அதிகமான ஊர்களில் மருத நிலம் காணப்பட்டது. இப்போதும் அவ்வாறே காணப்படுகிறது. மருத நிலம் என்றாலே வயல்கள், குளங்கள், மருதமரம் என்பன கண்முன்னே தோன்றும். அந்தளவுக்கு அவை காலம் காலமாக நிலைத்து விட்ட தொடர் ஆகும். இது இயற்கை தரும் விருந்து எனலாம்.

மருத நிலக் காட்சிகளில் தாமரைக் குளம் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனெனில் ஒரு காலத்தில் விவசாயம் செய்யப்படும் மருத நிலத்துப் பயிர்களுக்குத் தேவையான நீரைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் மருத நிலத்தின் மத்தியில் குளங்கள் காணப்படுவது மிகவும் சிறப்பும், இயற்கையழகும் கொண்டது எனலாம்.

முல்லை நிலம் தென்மராட்சியில் சிறப்பாகக் காணப்படுகிறது. அது பெரும்பாலும் காடும் காடு சார்ந்த நிலையில் மருத நிலத்தோடு மயங்கிய நிலையில் காணப்படுகிறது. குறிப்பாக பெருங்காடு என்ற நிலையில் இல்லாமல் சிறு காடுகளாகக் காணப்படுகின்றன. சரசாலையின் வடக்கேயும், மேற்கேயும் வயல் நிலங்களைத் தாண்டி சிறு காடுகளாகக் காணப்படுகின்றன. அங்கு சிறு விலங்குகள் வாழ்ந்து வருகின்றன. நரி, பன்றி, குரங்கு என்பனவும் பறவைகளாக கொக்கு, காகம், கிளி, பருந்து, நாரை, மைனா, செம்பகம், குயில் என்பனவும் காணப்படுகின்றன. தற்போது என்று மில்லாதவாறு குரங்குகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது. பயிர்களை நாசம் செய்கின்ற ஒரு விலங்காக குரங்கு காணப்படுகிறது. குறிப்பாக மாங்காய், முருங்கைக்காய், இளநீர், தோட்டப் பயிர்களை நாசம் செய்தல் என்பன முதன்மை நிலையில் காணப்படுகிறது. இது தென்மராட்சி முழுவதும் பரந்த நிலையில் காணப்படுகிறது. மட்டுவிலின் மேற்கேயும் சிறுகாடுகள் வயல் நிலங்களை அடுத்துக் காணப்படுகின்றன. மந்துவில், வரணி போன்ற பிரதேசங்களிலும் முல்லை நிலம் காணப்படுகிறது. இங்கும் வயல் நிலங்களை அடுத்துக் காணப்படுகின்றது.

நெய்தல் நிலம் என்கின்ற போது சிறப்பாக நாவற்குழி, கேரதீவு, கோயிலாக்கண்டி, கச்சாய் போன்ற இடங்களைக் குறிப்பிடலாம். இங்கு மீன்பிடித்தல், மணல் அகழ்தல் போன்ற தொழில்கள் இடம்பெறுகின்றது. சரசாலை, மட்டுவில் மருத நிலங்களை அடுத்து முல்லை நிலங்களும் அதனை அடுத்து மேற்குப்பக்கமாக நெய்தல் நிலம் காணப்படுகிறது. கோடை காலத்தில் கடனீரேரியில் நீர் வற்றும்போது உப்பு விளைச்சல் எவ்வித முயற்சியும் இன்றி தானாக விளைகிறது.

தென்மராட்சி மருதம், முல்லை, நெய்தல் ஆகிய மூன்று நிலங்களும் ஒன்றுடன் ஒன்று மயங்கிய நிலையில் காணப்பட, இங்கு தாவரங்களை எடுத்து நோக்கினால் மா மரம், பலா மரம், வாழை, தென்னை என்பன இயற்கையால் வளரும் தாவரங்களாகவும் பொருளாதாரம் சார்ந்ததாகவும் வருமானம் ஈட்டித்தரும் தாவரங்களாகவும் காணப்படுகின்றன. குறிப்பாக தென்மராட்சியின் சகல பிரதேசங்களிலும் வளரும் தாவரங்களாகக் காணப்படுகின்றன. இவை இங்கிருந்து குடா நாட்டுக்கு மாத்திரமல்ல நாட்டின் ஏனைய பிரதேசங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்ப டுகின்றன. தற்போது வெளிநாடுகளுக்கும் குறிப்பாக மேலைத்தேச நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. சித்திரை வைகாசியில் சிறு தானியங்களாகிய பயறு, உழுந்து, கௌபி, பூசணி என்பன வயல்களில் நெல் அறுவடையின் பின் பயிரிடப்படுகின்றன.

தென்மராட்சியின் முக்கிய பொருளாதாரப் பயிராக பனை மரம் காணப்படுகிறது. பனங்கிழங்கு, பனாட்டு, நுங்கு, பனம் பழம், கள், கருப்பநீர், பனங்கட்டி என்பன காணப்படுவதுடன் தென்மராட்சியின் சிறுகைத் தொழி லுக்கான மூலப் பொருள்களை பனைமரம் வழங்குகின்றது. குறிப்பாகப் பனங்கட்டித் தொழிற்சாலைகள் இயங்குவதற்கு முக்கிய மூலப் பொருளாக கருப்பநீர் காணப்படுவதுடன், அது பனைமரங்களில் இருந்து அதற்குரிய சிறப்புப் பருவ காலமாகிய சித்திரை, வைகாசி அமைந்து காணப்படுகிறது. அக்காலங்களில் பதநீர் பனை மரங்களில் இருந்து எடுக்கப்பட்டு பனங்கட்டி உற்பத்தி நடைபெறுகிறது. தற்போது உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் நல்ல வரவேற்புக் காணப்படுகிறது.

பனையோலையில் கடகம், பெட்டி, தட்டுகள், அலங்காரப் பொருட்கள் செய்யப்படுகின்றன. அத்துடன் தொப்பி, பாய், சுளகு, வட்டி, திரிகணை வளையம் என்ப னவும் குடிசைக் கைத்தொழிலாக நடைபெற்று வருகிறது. இத்தொழில் பாரம்பரிய குடிசைக் கைத் தொழிலாக இருந்து வருகிறது.

மாரி காலங்களில் மேட்டு நிலங்களில் வற்றாளை வெங்காயம், பயற்றை, வெண்டி, கீரை என்பன பயிரிடப்படுகின்றன. அக்காலங்களில் நீர்ப்பாய்ச்சலற்ற நிலையில் மழை நீர் முழுமையாக அப்பயிர்கள் வளர உதவுகின்றது. இது தொழில் இன்றி இருப்போருக்கு ஒரு வாழ்வாதாரமாகும்.

சரசாலை, தென்மராட்சியில் முக்கிய கனிய வளமான சுண்ணாம்புக்கல் உற்பத்தி இடம்பெறும் ஒரு சிறு கிராமம் ஆகும். ஒரு காலத்தில் குடாநாடு, வன்னிப் பிரதேசம் என எல்லா இடங்களுக்கும் வழங்கல் செய்யப்பட்டது. தற்போதும் சரசாலைக் கிராமத்தில் இருந்து கல் பல்வேறு இடங்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றது. வயல், தோட்ட நிலங்களின் கீழ் சுண்ணக் கற்பாறைகள் ஏராளமாக எங்கும் பரந்து காணப்படுகிறது. இக் கற்கள் பல்வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றன. இக் கற்கள் குறிப்பாக வீடுகட்ட, கிணறு கட்ட அலங்கார வேலைகள் செய்ய கோவில் படிகள், மூலஸ்தானம் என பலவற்றுக்கு உபயோகமாகின்றது. அத்துடன் இக்கற்கள் நீண்ட கால பாவனைக்குரியதாக இருப்பது சிறப்பம்சமாகும்.

சரசாலை என்பது சரசு + ஆலை = சரசாலை என்பதாக அதன் ஊர் நாமம் அமைந்து காணப்படுகிறது. சரசு என்றால் குளம் என்பது அதன் பொருளாகும். அந்த வகையில் மருத நிலத்துக்கு மத்தியில் பல குளங்கள் இன்றும் சரசாலையில் காணப்படுகின்றன. ஆலை என்றால் கள் அல்லது தேன் என்பது அதன் பொருளாகும். எனவே சரசாலை என்பது தாமரைப் பூவில் தேன் கொண்ட குளம் என்ற அர்த்தம் கொண்டதாய் சரசாலை ஒரு காரணப் பெயராகக் காணப்படுகிறது. அத்துடன் இங்கு பல குளங்கள் காணப்படுகின்றன. அக் குளங்கள் யாவும் இன்றும் தாமரைக் குளங்களாகவே விளங்குகின்றன. மாத்தளாய்க்குளம், கூனிக்கிராய்க் குளம், ஆவரம்பிட்டிக் குளம், சின்ன இராமாவில் குளம், பெரிய இராமாவில் குளம், கரடிப் பொக்குக்குளம், நுணாவில் குளம், வண்ணாங்கிராய்க் குளம், குமுக்களைக்குளம், கிராய்க்குளம் என்பன அக்குளங்களாகும். குளங்கள் நிறைந்த என்ற சிறப்பை சரசாலை பெறு




வது சிறப்பான ஒரு விடயமாகும். இவ்வகையில் தென்மராட்சி மூவகை நிலங்களையும், பல வளங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றமை தென்மராட்சி மக்கள் பெற்ற வரப்பிரசாதமாகும்.

# நீத்தார் நினைவலைகள்

## ஜீவா அண்ணா ஒரு நினைவிடை தோய்தல்




தமிழர்களிடம் புரையோடி உடன் பிறந்த நோயாக தொடரும் சமூக குறைபாடுகளைகளைந் திடும் நோக்கோடு தென்மராட்சி மண்ணில் முகிழ்ந்த அறவழி சிந்தனை 1979 அறவழி போராட்டக்குழுவாக உருவெடுத்தது. அதன் செயலாளர் பதவியில் அமர்த்தப்பட்டவர் தான் கந்தையா ஜீவகதாஸ். அந்த நாட்களில் தமிழ் அரசியலில் தமிழ் மக்களின் கவனம் அதிகமாக இருந்தது. அதனால் அறவழி ரீதியான போராட்டங்களும் உணரப்பட்டன.

ஆலய பிரவேசம், கலப்பு திருமணம் என சமா தான ரீதியில் சமூக குறைபாடுகளுக்கு தீர்வு பெறப்பட்டன. எந்த திட்டத்தையும் செயலாக்குவதற்கு நிதி அவசியம் அன்பர்கள், ஆதரவாளர் போன்ற நலன் விரும்பிகளின் தயவுடனே குழு பணிகள் பரிணமித்தன.

அறவழி போராட்ட குழுவின் ஆரம்ப கர்த்தா மறவன்புலவு க.ச ச்சிதானந்தன் 25 ஆயிரம் ரூபா வினை குழுவின் பணிகளுக்காக நன்கொடையாக கையளித்தார். அவ்வேளை இந்நிதி பெரும் பங்களிப்பு. அது போலவே அரசு மற்றும் அரசு சாராத நிறுவனங்களின் தொடர்புகளை சர்வதேச மட்டத் திலும் ஏற்படுத்தி கொடுத்தார். ஜீவா அண்ணாவுக்கு ஒரு புள்ளி கிடைத்தால் போதும் அதற்கு வடிவம் கொடுக்கும் செயல்திறன் உடையவர்.

அறவழி போராட்ட குழுவும் அரசு சாராத தன்னார்வ நிறுவனமாக மாற்றமடைந்தது. இந்த சூழலில் தான் 1983 ஆடி கலவரத்தில் அகதியான வர்களுக்காக அகதி முகாம் அமைத்து அறவழி பராமரித்தது அந்த பணியில் அர்ப்பணிப்புடன் இயங்கி சகல தரப்புகளிடமும் அறவழி போராட்டக் குழுவுக்கு நன்மதிப்பை பெற்றுக் கொடுத்தார்.

பாடசாலை முன்கல்வி ஊடாக. யாழ். மாவட்டத் தில் 70 கிராமங்களை இனம் கண்டு அங்கு அற வழி மழலைகள் கல்வி பூங்கா என்னும் பெயரில் கிராமிய தொண்டு தொடர்ந்தன . மாணவர் மேம் பாட்டு பணி, தமிழ் சிறுவர் தினம், மகளிர் மறுமலர்ச்சி திட்டம், இடம் பெயர்ந்த மக்களுக்கான தற்காலிக வசிப்பிடங்கள், சுய தொழில் ஊக்குவிப்பு, விவசாய மேம்பாட்டு என பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

தேசிய, சர்வதேச மற்றும் ஐ. நா. நிறுவனங்களின் அனுசரனையுடன் நூற்றுக்கணக்கான பணிகள் குழுவினரால் நடைமுறை படுத்தப்பட்டன. அறவழி இயக்குனர் சபை உட்பட்ட நிர்வாக கட்டமைப்பு இருந்தாலும் பெருந்தொகையான பணிகளை நெறிப்படுத்திய பெருமை ஜீவா அண்ணாவையே சாரும். அவரது கடின உழைப்பும், விடாமுயற்சியுமே குழுவின் பன்முக செயற்பாட்டுக்கு காரண மாகும்.

சமூக பணியுடன் ஒரு பத்திரிகையாளனாகவும் இயங்கியிருக்கிறார். யாழ்ப்பாணம், கொழும்பு ஆங்கில, தமிழ் ஊடகங்களின் செய்தியாளர், கட்டுரையாளர் என்ற மட்டத்தில் இயங்கியவர். வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் செயலாளராகவும் கடமையாற்றினார்.

அறவழி போராட்டக்குழுவிற்காக அறவழி, அறவழி செய்தி மடல் மற்றும் ஆங்கில மொழி பத்திரிகைகளையும். வெளியிட்டு வந்தவர்.

அறவழி போராட்டக்குழுவின் 25 வருட பணியை சிறப்பிக்கும் வகையில் அறவழி **silver jubilee journal** என்னும் 70 பக்கம் கொண்ட சிறப்பு மலர் ஒன்றை வெளியிட்டார். (1979 - 2004)

அந்த மலரில் குழுவின் பணிகள் குறித்து விலாவாரியாக குறிப்பிடப்பட்டுள்ளன. சாவகச்சேரி அரிமா கழகம், யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் என பல தன்னார்வ நிறுவனங்களுடன் நெருங்கிய தொடர்புடன் இருந்தவர்.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி பழைய மாண வரான ஜீவா அண்ணா கல்வி, விளையாட்டு, பாடசாலை நிகழ்வுகளில் தனது திறமைகளை வெளிக் காட்டியவர். தனது இளமை காலத்தில் அதி சிறந்த கரபந்தாட்ட வீரனாக திகழ்ந்தவர். அவருக்கு இருந்த திறமைக்கும், புலமைக்கும் அரச உத்தியோகம் கிடைத்திருக்கும் அதனை அவர் எதிர்பார்க்கவில்லை அறவழியில் என்று கால் வைத்தாரோ அன்றே அந்த பணிகளுடன் பயணித்தார்.

ஆரம்ப காலங்களில் இடதுசாரிய செயற்பாட்டாளராக இருந்த ஜீவா அண்ணா அறவழி போராட்ட குழு பணி தொடர்பாக அமெரிக்கா சென்று திரும்பி வந்தபோது அமெரிக்காவை கண்டித்து கோசம் எழுப்பியவன் என்று மனம் நொந்து கொண்டதாக கூறினார். ஐரோப்பா, ஆபிரிக்கா உட்பட பல நாடுகளுக்கும் அவர் விஜயம் செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அந்நாட்களில் எம்மவர்கள் பலர் குறிப்பிட்ட நாடுகளில் தஞ்சமடைந்தனர். அந்த நாடுகளில் சுலபமாக அரசியல் தஞ்சம் கோரியிருக்கலாம் ஆனால் அவர் அதை விரும்பவில்லை தாய்நாடே. தஞ்ச மென வாழ்ந்தார்.

யாருடைய கண்பட்டுதோ? தெரியாது 2013 பெப். 02 இல்ஜீவா அண்ணா நிரந்தரமாக கண்ணை மூடினார். அத்துடன் அறவழின் செயற்பாடுகளும் மௌனித்து போயின. தற்பொழுது மெல்ல மெல்ல பணி செய்ய தொடங்கியுள்ளது . அறவழி ஒரு அரசு சாராத நிறுவனமாக இருந்த போதும் அரசு நிறு வனங்களுக்கு நிகராக செயற்பட்டதற்கு ஜீவா அண்ணா அவர்களே காரணம் என்பது சுட்டிக் காட்டத்தக்கது .

அமெரிக்கா உட்பட உலக நாடெங்கும் அற வழிப் போராட்டக்குழுவுடன் நெருங்கிய தொடர்பில் பலர் இருந்தார்கள் அமெரிக்காவில் ஜோர்ஜ் வில்லபி என்ற அறவழி சிந்தனையாளர் இருந்தார். அற வழி ஆரம்ப நாள் தொடக்கம் நீடித்த இந்த தொடர்பினால் பல வேலைத்திட்டங்கள் நடைமுறைபடுத்தப்பட்டன. அறவழியுடன் நெருக்கமான தொடர்பு வைத்திருப்பவர்களின் பெயர்கள் பணிமனையில் அலுமாரியில் எழுதப்பட்டிருக்கும் அது ஜீவா அண்ணாவின் இருக்கைக்கு நேர் எதிராக இருக்கும் அவரின் பார்வையில் படும் படியாக இருக்கும் அதனை அவரே அப்படி வைத்திருந்தார். மனித நேய பணிகளுடன் அறிவியல் ரீதியில் தான் சார்ந்த மக்களையும் இனத்தையும் வழி நடத்தும் நோக்கில் எழுத்தாளர் பட்டறை, அறவழி இலக்கிய சந்திப்பு, அறவழி பொது நூலகம், தமிழ் சிறுவர் தினம் போன்ற பல அறிவியல் திட்டங்கள் ஜீவா அண்ணாவின் சிந்தனையில் உருவாகின. அறவழி பொது நூலகம் 1989 மார்கழி 25 ஆரம்பித்து வைக்கப்பட்டு ஏழு நாட்களும் இயங்க வைக்கப்பட்டன.

குழந்தைகள் மீது அலாதிப்பிரியம் உடையவர். குழந்தைகளுடன் குதூகலித்து விளையாடுவார் .

அது போலவே செல்லப்பிராணிகள் மீது கொள்ளை ஆசைகொண்டவர். தனது இல்லத்திலே பூனை வளர்த்து வந்தார் அதற்கு அபிஎன பெயரிட் டார் . அபி எப்பொழுதும் ஜீவா அண்ணாவுடனே இருந்தது . அவர் ஸ்கூட்டரில் பயணிக்கும் போது முன்கரியரில் தானும் உட்காரும். கம்பியூட்டர் பார்க்கும் போதும் அதன் விளிம்பில் இருக்கும். அவரது அறையிலே வசித்து வந்தது. ஜீவா அண்ணா இறந்து விட்ட நாளிலிருந்து ஊண் உறக்கமின்றி சோகமே உருவாயிருந்த ஜீவா அண்ணா சென்ற இடத்துக்கு சென்றது.

இன்று ஜீவா அண்ணா இல்லாமல் அறவழியில் பெரும் வெற்றிடம் ஏற்பட்டுள்ளது.

கேசரி

கேசரி

## ஈழத்தமிழ் அரசியலில் நிரப்ப முடியாதவெற்றிடம் ரவிராஜ் இழப்பு

**2021நவம்பர் 10 அவரது 15 ஆவது நினைவு தினம்**




ஈழத்தமிழ் அரசியலில் பல வெற்றிடங்கள் நிரப்பபடாமலே இருக்கிறது அதற்கு இணையாக இருக்க கூடியல தலைவர்களும் வலிந்து கொல்லப்படும் போது தமிழர்களுக்காக குரல் தரவல்லவர்கள் யார்? தமிழின விடுதலையை கையிலெடுத்தவர்கள் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டார்கள். மனித நேய அமைப்புகள் ,ஐ. நா. நிறுவனங்கள், சர்வதேச நீதிவிசாரணையாளர்கள் இக்கொலைகளை கண்டித்தாலும் இதனை நிறுத்த முடியவில்லை .

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வரை இந்த கொலைகளும் தொடர்ந்து கொண்டேயிருக்கும் என்பதற்கு சாட்சியாக ஜனநாயக வழியில் அரசியலில் பயணித்த சட்டத்தரணி நடராஜா ரவிராஜ் அவர்களின் கொலை அமைந்தது.

2006 நவம்பர் 10ஆம் திகதி நாரகன்பிட்டியில் அவரது வீட்டுக்கு அருகில் வைத்து சுட்டுக்கொல்லப் பட்டார். சட்டம், ஒழுங்கு கடைப்பிடிக்கப்படும் அரச கட்டுப்பாட்டு பகுதியிலே இந்த படுகொலை அரங்கேற்றப்பட்டது. ரவிராஜ் செய்த குற்றம் என்ன? தமிழர்களின் வலியை, உணர்வுகளை அனைவரிடமும் எடுத்துச்சென் றவர். சிங்க ளம், ஆங்கில மொழி பேசும் மக்கள் மத்தியில் புரிய வைத்தவர் போரினாலே வன்முறையாலோ இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என்பதை வலியுறுத்தி வந்தவர்.

நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் அதிகார பீடத்தின் வெற்று வார்த்தைகளை, கபட நாடகத்தை தோலுரித்து காட்டியவர். சிங்கள சாதாரண மக்கள் தொடங்கி புத்திஜீவிகள், அரசியல் வாதிகள் மத்தியில் கருத்துகளை பரப்பியவர். தமிழீழ விடுதலை போராட்டத்தை முழுமனதுடன் ஆதரித்தவர் அதற்காக குரல் தந்தவர். அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் அவரின் கருத்துகளுக்காக காத்திருந்தன.

(06 பக்கம் பார்க்க)




# மாண்புறு மட்டுவில்

தென்மராட்சி பிரதேசத்தின் பழம்பெரும் பதிகளில் ஒன்றாக விளங்குவது மட்டுவில். யாழ். நகருக்கு கிழக்கே ஏறத்தாழ 16 கிலோ மீற்றர் தொலைவில் மட்டுவில் அமைந்துள்ளது. மட்டு என்பது எல்லை, கள், வாசனை என பல பொருள்களை குறிக்கும் சொல்லாகும். எனவே நீர்ச்சுவை காரணமாக இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். அல்லது தென்மராட்சியையும் வலிகாமத்தையும் பிரிக்கும் எல்லையில் இதன் இட அமைவு இருக்கின்றமையால் எல்லைக்குளம் என்ற பொருள்பட இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

பெருங்குளம் ,நெளியன் குளம், அம்பலந்துறை குளம், நுணாவிற் குளம், மருதங்குளம் முதலிய இடப்பெயர்கள் இப்பிரதேசத்தில் காணப்படுகின்றன. தேன் மிகுதியாக சேகரிக்கப்பட்டமையால் மட்டுவில் என்ற பெயர் ஏற்பட்டதாகவும் குறிப்பிடுவர்.

சந்திரபுரம் என்ற பழமையான பெயர் இக்கிராமத்திற்கு இருந்துள்ளது. மட்டுவில் பிரதேசம் யாழ்ப்பாணத்திலுள்ள கிராமங்களுள் மிகப்பெரும் பிரதேசமாகும்.

30.08 சதுர கிலோ மீற்றர் இதன் பரப்பளவு. மட்டுவில் பிரதேசத்தின் வடக்கு எல்லையாக புத்தூர் வீதியும், கிழக்கு எல்லையாக பருத்தித்துறை வீதியும், தெற்கு எல்லையாக ஏ9 வீதியும், மேற்கு எல்லையாக வலி. கிழக்கு கடல் ஏரியும் அமைந்துள்ளது.

கைதடி நுணாவில்(ஜே/309), தென்மட்டுல் (ஜே310) மட்டுவிலின் நிர்வாக அலகு கருதி இப்பிரதேசம் கைதடி நுணாவில் (ஜே/309), தென்மட்டுவில் (ஜே/310), மட்டுவில் நுணாவில் (ஜே/311), மட்டுவில் மத்தி (ஜே/312), மட்டுவில் வடக்கு (ஜே/313), மட்டுவில் கிழக்கு ஜே/314), சந்திரபுரம் (ஜே/315) என ஏழு கிராம சேவகர் பிரிவுகளாக பிரிக்கப்பட்டு தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவால் நிர்வகிக்கப்படுகிறது. இதில் 12 கிராமங்கள் அடங்குகின்றன. கைதடி நுணாவில், தென்மட்டுவில், மட்டுவில் நுணாவில், மட்டுவில் வடக்கு, சந்திரபுரம் தலா ஒவ்வொரு கிராமங்களையும் , மட்டுவில் மத்தி - நான்கு கிராமங்களையும் ,மட்டுவில் கிழக்கு மூன்று கிராமங்களையும் உள்ளடக்கியுள்ளன .

மட்டுவில் என்றதும் நினைவுக்கு வருவது மட்டுவில் கத்தரிக்காய். இதனை முட்டிக்கத்தரிக்காய் என்றும் அழைப்பர். மட்டுவில் பன்றிதலைச்சி அம்மன் ஆலயத்திற்கு வழிபாட்டிற்காக வருபவர்கள் பொங்கல் படைத்து மட்டுவில் கத்தரிக்காய் கறியுடன் உண்பதை பெரும் பேறாக கருதுவர்.

மட்டுவில் மக்களின் பிரதான தொழில் விவசாயம் ஆகும். இருப்பினும் சிறப்பான விவசாய செய்கைக்கு நீர் வளம் ஒரு சவாலகவே காணப்படுகிறது. விவசாய தகவலின் படி 2016இல் வயற்காணி 132 ஹெக்கடேயராகவும், தோட்டக்காணி 25 ஹெக்கடேயராகவும் இருந்தன.

தும்புத்தடி, ஈர்க்கு தடி, பெட்டி, கடகம், புற்பாய் இழைத்தல், அப்பளம் தயாரித்தல் என சிறு கைத்தொழில்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மட்டுவில் பிரதேசத்தில் 36 இந்து ஆலயங்களும், ஒரு கிறிஸ்தவ தேவாலயமும் மக்களின் வழிபாட்டு இடங்களாக இருக்கின்றன. மட்டுவில் தெற்கு அ.மி.த.க.பாடசாலை, மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம், மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம், மட்டுவில் கமலாசினி வித்தியாலயம், மட்டுவில் வடக்கு இ.த.க., கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை, மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம், மட்டுவில் தெற்கு சாந்தநாயகி வித்தியாலயம் ஆகிய 8 பாடசாலைகள் அமைந்துள்ளன.

இலங்கையின் முன்னணி பதிப்பகங்கள் மட்டுவிலிலே தோற்றம் பெற்றன. திருக்கணித பஞ்சாங்கம், பதிப்பகம். மெய்கண்டான் பதிப்பகம் என இரண்டு பதிப்பகங்கள். ஊடகம், சட்டம், அரசியல், மருத்துவம், இசை, இலக்கியம், விஞ்ஞானம், சிற்பம், படைப்பாளிகள், கவிஞர்கள் கல்வியாளர்கள், சமூக அக்கறையாளர், கலைஞர்கள், அறிஞர்கள் என ஆற்றல் மிக்க பன்முக ஆளுமைகளின் பூர்வீகமாக கொண்ட மட்டுவில் மண் மாண்புபெற்றதாகும்.

மேற்குறிப்பிட்ட விவரங்களை சிறிய பதிவுக்குள் அடக்க முடியாது முழுவிபரங்கள். செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன் எழுதிய மாண்புறு மட்டுவில் கட்டுரையில் பதிவு பெற்றுள்ளது.

யுத்த நாட்களில் இராணுவ நடவடிக்கை, சுற்றிவளைப்பு போன்றவற்றால் பாதிக்கப்பட்ட மட்டுவில் இளையோர் பலர் புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளில் தஞ்சமடைய தொடங்கினர். 2ஆயிரம் ஆண்டில் ஏற்பட்ட தென்மராட்சி இடப்பெயர்வின் போதும் மட்டுவில் மக்கள் வடமராட்சி, வலிகாமம் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்தனர். இதனால் மட்டுவில் மற்றும் அதனை அண்டிய பகுதியில் குடித்தொகை குறைவுற்றது. 2001இல் மீளக்குடியேற அனுமதிக்கப்பட்ட போதும் குடித்தொகையில் சிறு தொய்வு ஏற்பட்டது.

தென்மராட்சியின் தொல்சீர்ப்பதிளுள் ஒன்றாக விளங்கும் மட்டுவில் இன்று பல அபிவிருத்திகளை காணவேண்டிய கிரம ம் விவசாயம், கைத்தொழில் உற்பத்தி, வாழ்வாதாரம் என அனைத்து துறைகளிலும் இதன் உயர்ச்சி எட்டப்பட வேண்டும். தென்மராட்சியில் படித்தவர்கள் அதிகம் வாழ்ந்த இடம். முதன் முதலில் பாடசாலை நிறுவப்பட்டதும் இந்த மண்ணில் தான். தனித்துவ விவசாய செய்கைக்குரிய நிலம் ,பிரபல வழிபாட்டு தலங்களை கொண்ட மண் என்ற பெருமை மட்டுவிலுக்கு உண்டு மாண்புறு மட்டுவில் என்ற பெருமைக்கு அன்றும், இன்றும் என்றும் மட்டுவில் உரித்துடையதே.

**குறிப்பு:- கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன் எழுதிய மாண்புறு மட்டுவில் கட்டுரையிலிருந்து தொகுக்கப்பட்டது**

## ஈழத்தமிழ் அரசியலில் .........

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரணஎன்ற சிங்கள தொலைக்காட்சி நேர்காண லுக்கு சென்று திரும்பும் வழியிலே அவர் கொல்லப்பட் டார். ஏற்கனவே நன்கு திட்டமிடப்பட்டு சாகடிக்கப்பட்டார். தமிழர்களுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு. கொலை சூத்திரதாரிகள் இனம் காணப்பட்டனர். சட்ட நடவடிக்கை கள் கண் துடைப்பாக நடந்தன. படையினரே இக்கொலை யின் சந்தேக நபர்கள். ஆம் வேலியே பயிரை மேய்ந்த கதையான எத்தனை சம்பவங்கள் இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசில் நடந்துள்ளன. அவற்றில் இதுவும் ஒன்றாக கடந்துள்ளது.

நடராஜா ரவிராஜ் சாவகச்சேரியை பிறப்பிடமாக கொண்டவர். டிறிபேர்க் கல்லூரி, யாழ். சென். ஜோனஸ் கல்லூரி பழைய மாணவர், சட்டத்துறை கல்வியை முழுமையாக கற்று சட்ட புலமையை பெற்றவர். 1989இல் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்தார். படை யினரால் கைது செய்யப்படும் அப்பாவி தமிழ் இளை ஞர்களுக்காக வாதாடியவர்.

அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும் என்ற ஆர்வம் கல்லூரி காலங்களில் துளிர் விடத்தொடங்கியது. 1994 நாடாளுமன்ற தேர்தலில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி சார்பில் கொழும்பில் போட்டியிட்டார். இதுதான் அரசியலில் அவர் போட்ட பிள்ளையார் சுளி.

1987 தமிழர் விடுதலைக்கூட்டணியில் இணைந் தார். 1990 கட்சியின் மத்திய குழு உறுப்பினரானார். 1997 யாழ். மாநகர சபை தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார் .பிரதி மேயராக பதவி ஏற்று மாநகர சபை பணிகளுக்காக இயங்கினார். அச்சுறுத்தல், மிரட்டல்கள் மத்தியில் சபை நடவடிக்கைகள் தொடர்ந்தன. சபையின் மேயர் திருமதி சறோஜினி யோகேஸ்வரன்கொலையானார். தொடர்ந்து பொன். சிவபாலன் மேயரானார். அவரும் கொல்லப்பட சபையின் இயங்குநிலை கேள்விக் குறியானது. ரவிராஜ் அடுத்த மேயர் பதவியை ஏற்றார் எப்பொழுதும் துப்பாக்கி குண்டுகள் தன் மீது பாயும் என்பதால் தந்திரோபயமாக இயங்கினார்.

யாழ்ப்பாணத்தில் இல்லாமல் கொழும்பில் தங்கியிருந்து மாநகர சபையை இயக்கி வந்தார். மாதாந்த கூட்டங்களுக்கு மட்டும் யாழ். வந்து செல்வார். சிவபாலன் மேயராக இருந்த காலத்திலும் இவ்வாறு தான் செயற்பட்டவர். அதனால் நிர்வாகத்தில் தளம்பல்கள் ஏற்பட்டன. அப்பொழுது ரவிராஜ் பிரதி மேயர். நான் கடமையாற்றிய ஊடகத்தின் சார்பில் மாநகர சபை கூட்டங்கள் உட்பட அனைத்து செய்திகளையும் திரட்ட வேண்டிய பொறுப்பு என்னிடம் இருந்ததால் தேவைக்கேற்ப தயாரித்து பத்திரிகையில் வெளிவரச் செய்வேன்.

யாழ். மேயர் கொழும்பிலிருந்து மாநகர சபை நிர்வாகத்தை நடத்துகிறார். என்று விமர்சித்து நான் சார்ந்த ஊடகம் செய்தி வெளியிட்டது.

அந்த ஊடகத்தில் வாரம் தோறும் வரும் உள்ளும் புறமும்பத்திஎழுத்தில் முதல்வர் வந்தார், பார்த்தார், சென்றார். என விமர்சித்து பிரசுரிக்கப்பட்டது. தமிழர் விடுதலைக்கூட்டணி மாநகர சபை உறுப்பினர்களுக்கு இந்த செய்தி கடும் கோபத்தை ஏற்படுத்தியது. அடுத்த மாநகர சபைக் கூட்டத்தில் இச்செய்தியே பேசு பொருளாக இருந்தது.

பிரதி முதல்வர் ரவிராஜ் இச் செய்திக்கு கண்டன கணைகளை கடுமையாக வீசினார் செய்திக்கு மேலாக எமது செய்திகளை கழுவி ஊத்தினார். இச்செய்தியை யார் எழுதியது எல்லாம் எங்களுக்கு தெரியும் என இடையிடையே என்னை ஆக்ரோமாக பார்த்தவாறு கூறினார். முதல்வர், பிரதி முதல்வர் பத்திரிகையாளர் என்ற வகையில் எங்களுடன்

நட்பாகத்தான் பழகுவார்கள் .ரவிராஜ் அண்ணா என்றுதான் எம்மை அழைப்பார். எமக்கு எதிராக தெரிவிக்கப்பட்ட கருத்துகளை வரிக்கு வரி பிரசுரித்தோம்.

2001,2004 நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகித்தார். இறந்த பின்னர் மாமனிதர் வழங்கி கௌரவிக்கப்பட்டார் .தற்பொழுது சாவகச்சேரியில் சிலையாக எழுந்து நிற்கிறார். ரவிராஜ் இழப்பின் பின்னர் சாவகச்சேரியில் நாடாளுமன்ற உறுப்பினராக எவரும் வெற்றிபெறவில்லை.



**ஆசி. கந்தராஜா**

தென்மராட்சி, கைதடி மண்ணின் வாரிசு.
இலக்கிய உலகம் இவரை கொண்டாடுகிறது.
கல்வியாளர்,பூங்கனியியல்,உயிரியல்
தொழில் நுட்ப துறை பேராசிரியர்.
அவுஸ்திரேலியா -ஈழத்து எழுத்தாளர்

# தவக்கோலங்கள்

கடலில் இருந்து வீசிய உப்புக்காற்று உடலுக்கு இதமாகவும் மனசுக்கு சுகமாகவும் இருந்தது. கடற்காற்றை அளைந்தபடி வண்டி பாலத்தின்மீது சென்றது.

ஆயத்தடியில் நிறுத்தும்படி குரல் கொடுத்தேன்.

என்னுடைய பத்தொன்பது வயது மகனும் கூடவே இறங்கிக் கொண்டான். மகளும் மனைவியும் வண்டியிலே வீடு நோக்கிய பயணத்தை தொடர்ந்தார்கள்.

கைதடியையும் கோப்பாயையும் இணைக்கும் பாலத்தின் கைதடி அந்தலைக்குப் பெயர் ‘ஆயம்’. கடலின் கைதடிக் கரையோரமாக கோடைகாலத்தில் பெருமளவு உப்பு விளைந்திருக்கும். இந்த உப்பினை அறுவடைசெய்தோரிடம் அந்தக் காலத்தில் வரி அறவிடப்பட்டதாம். அந்தக்காலம் என்பது ஆங்கிலேயர் ஆண்டகாலம். உள்நாட்டில் தயாரிக்கப்படும் பொருட்களுக்கு விதிக்கப்படும் தீர்வை ‘ஆயத்தீர்வை’ என அழைக்கப்பட்டதாகவும், அது வசூலிக்கப்பட்ட இடம் ஆயத்தடி என வழங்கப்படலாயிற்று என்றும் என் ஐயா, ஆயம் பற்றிக் கூறியவை நினைவுக்கு வருகின்றன. அவர் கைதடியிலே பிறந்து வளர்ந்து அங்கேயே தமிழ் ஆசிரியராகப் பணியாற்றியவர். பொருள் சேர்க்கா விட்டாலும் ‘நல்லமனிதர்’ என்ற பெயரை பல வட்டங்களிலும் சம்பாதித்திருந்தார். இப்படிப்பட்ட வாத்தியாரின் பிள்ளை தப்புத்தண்டா செய்யக் கூடாது என்ற கிராமத்தின் பொதுவான விதி, பல தடவைகளில் என்னை சங்கடத்தில் ஆழ்த்தியதுண்டு.

ஆயத்தடியில் இறங்கியதும் நினைவு ஒழுங்கைகளிலே, என் மனசு அறுபதாம் ஆண்டுகளின் பிற்பகுதியை நோக்கிப் பயணித்தது.

ஆயத்தை சுற்றிய வீடுகள் பலவும் இப்போது சிதிலமடைந்துவிட்டன. எஞ்சியுள்ள வீடுகள் சில, மனித சஞ்சாரம் இழந்தனவாகத் தோன்றின. அங்கிருந்த ஆரம்ப பாடசாலையும் தரைமட்டமாயிருந்தது. திட்டியாய் தெரிந்த மண்மேட்டையும் அருகிலுள்ள கல்லு குவியலையும் வைத்துதான் பாடசாலை இருந்த இடத்தினை என்னால் அடையாளப்படுத்த முடிந்தது. அந்த ஆரம்பபாடசாலை மழலைகளின் இரைச்சலுடன் இருந்த அந்தக்காலம்.





**மாரிகாலம்!**

வெள்ளமும் சேர்ந்து கொள்ள பாலத்தின் கீழே நீர்முட்டி மோதி ஓடியது. கடல்நீரின் வீச்சு என் மன ஓட்டத்துடன் போட்டியிட்டது. பாலத்தின் மீது போடப்பட்டிருந்த தார் றோட்டு யுத்தத்தின் வடுக்களைச் சுமந்து குண்டும் குழியுமாக காணப்பட்டது. யுத்தகளமாக்கப்பட்ட பிறந்தமண். இதனை நினைத்துக் கொண்டதும் இதயத்திலே ஒரு துடிப்பு நின்று, மீண்டும் துடிக்கத் துவங்கியது போன்றதொரு வலி.

பாலத்தில் காவலுக்கு அமைக்கப்பட்டிருந்த ‘சென்றி’யில் இருந்து இராணுவச் சிப்பாய்கள் இருவர் துவக்கும் கையுமாக எம்மை நோக்கி வந்தார்கள். போர்க்காலமாக இருந்திருந்தால் ஆயத்தடியிலுள்ள இராணுவ முகாமிருந்தே சரமாரியாக வெடிவைத்திருப்பார்கள். புரிந்துணர்வு ஒப்பந்தத்தினால் இந்த கெடுபிடிகள் சற்றே ஓய்ந்திருக்கின்றன.

எங்களை நெருங்கியதும், ‘வெளிநாடா..?’ என இராணுவத்தினர் தமக்குத் தெரிந்த தமிழில் கேட்டார்கள். உள்ளூரிலே வசிப்பவர்கள் கடற்காற்று வாங்க ஆயத்தடிக்கு வரத் துணிய மாட்டார்கள் என்று அவர்கள் சரியாகவே ஊகித்திருந்தார்கள்.

‘ஆம்’ என்பதற்கு அடையாளமாகச் சிரித்தேன்.

ஒன்று மறியாத என் மகன் என்னைப் பார்த்தான். அசடு வழியும் என் முகபாவத்திற்கு அவன் என்ன அர்த்தம் கொடுத்திருப்பான்? ஆமிக்காரர் சுணங்கி நிற்காது எம்மைக் கடந்து நடந்து கொண்டிருந்தார்கள். கடல் அலைகள் நுரை தள்ளியபடி பாலத்தின் மதகுச் சுவர்களில் மோதித் திரும்பின.

முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு,

அப்பொழுது எனக்கு, என் அருகில் நின்ற மகனின் வயசு கூட இருக்காது. நீர் பாலத்தின் கீழே ஓடிக் கொண்டிருக்க நாங்கள் றோட்டால், உப்புக் காற்றை கிழித்துக்கொண்டு சைக்கிளிலே தலை தெறித்த வேகத்தில் ஓடிக் கொண்டிருப்போம். நாங்கள் என்றால் பாலன், சொக்கன், சந்திரன், பூபாலன், துயைரன். பற்பன், நான் என்கிற அனைவரும். அப்போது எமக்கு சேவல் கூவும் விடலைப்பருவம்.

உயர்வகுப்பு விஞ்ஞானம் படித்த அந்தக் காலத்தில், விஞ்ஞானம் படிக்க கைதடியில் பாடசாலைகள் கிடையாது. இதனால் பாலத்தின் மறுதொங்கலைத் தொட்டு நிற்கும் கோப்பாய் பாடசாலையில் சேர்ந்து படிக்கலானோம். விஞ்ஞானம் படிப்பதில் ஆர்வம் இருந்ததோ இல்லையோ, கோப்பாய் பெட்டைகளுடைய செந்தழிப்பான முகங்களின் நினைவு, சைக்கிளை மிதிப்பதிலே உபரியான உந்துவிசையை சேர்த்ததாக நிதானிக்கமுடிகிறது.

பாலத்தினூடாக ஒரே ஒரு பஸ் மாத்திரம் சாவகச்சேரியிருந்து மானிப்பாய்வரை ஓடிக்கொண்டிருந்தது. ஒரு நிமிம் பிந்தினாலும் பல மணித்தியாலங்கள் வீதி ஓரம் காத்துக் கிடக்க வேண்டும். அந்தக்காலத்தில் கோப்பாய்க்கு படிக்க வரும் கைதடிப் பெட்டையளுக்கு அந்தப் பஸ்தான் கதி. வசதி படைத்த ஒரு சிலர் ஒன்று சேர்ந்து தமது பிள்ளைகளை வாடகைக் காரிலும் பாடசாலைக்கு அனுப்பினார்கள். பெட்டையள் சைக்கிள் ஓடுவது ‘நோடாலத்தனம்’ என்று அந்தக்கால யாழ்ப்பாணம் விமர்சனம் செய்தது. பணத்தால் எதையும் சாதிக்கலாம் என்று நினைத்த சிங்கப்பூர் சிதம்பரத்தின் மகள், சைக்கிள் ஓடத்துவங்கி ‘ஆட்டக்காரி’ என்று ஊரில் பெயர் எடுத்ததுதான் மிச்சம். கோப்பாய்க்கு சைக்கிளில் செல்லும் விடலைப் பருவத்து பெடியன்களுக்கு பஸ்ஸுக்காக காத்திருக்கும் பெட்டையளைக் கண்டால் சற்று இழப்பமான எண்ணமே!

அவர்களைக் கண்டதும் சுழட்டி வெட்டி, கைவிட்டு ஓடி பல சாகஸங்கள் செய்ய விழைந்ததுண்டு. இந்த ஸ்டைல்காட்டலில் சைக்கிளும் சைக்கிளும் முட்டுப்பட்டோ, கொழுவுப்பட்டோ றோட்டில் விழுந்து அடிபட்டதுமுண்டு. கைகால்கள் உரஞ்சுப்பட்டு ‘விழுப்புண்கள்’ சுமந்த காலமது!

நாம் கோப்பாயில் படித்த பாடசாலை கிறிஸ்தவ தேவாலயத்தை ஒட்டினாற்போல் அமைந்திருந்தது. அதன் அயலிலே அதனுடன் சம்மந்தப்பட்டவர்களும் வாழ்ந்தார்கள். இதனால் இந்தப்பகுதி நாகரீகம் பெற்றதுபோல் ‘பளிச்’சென்று தோன்றியது. கிறிஸ்தவம் மூலம் இந்த கோப்பாய் பெட்டைகளுடைய அலங்காரத்திலே இலேசாகத் தலைகாட்டிய மேற்கத்திய நாகரீகம் கோப்பாய் பெட்டைகளுடைய ‘வடிவை’ உயர்த்திக் காட்டுவதாக நாம் நினைத்துக் கொண்டோம். உண்மையிலே அப்போது எனக்கு அவர்கள் அழகு தேவதை களாகவே தோன்றினார்கள்.

கைதடியிருந்து பாலத்தினூடாகக் கோப்பாய் பாடசாலைக்கு செல்லும் நாம் எமது தலைமுடி குழம்பாமல் இருக்கப் படாதபாடு படுவோம். இதற்காக நாம் எண்ணையும் தண்ணீரும் கலந்து வைத்து தலைமயிலை படிய வாரி இழுத்திருப்போம்.

‘எண்ணையோடை தண்ணியை கலந்து வைக்காதை, தடிமன் பிடிக்கும்’ என்று அம்மா சத்தம் போடுவதை என்றுமே சட்டை செய்ததில்லை. தலைவாரி முடித்தபின், எண்ணையும் தண்ணீரும் தலை ஊத்தையும் கலந்த கோப்பி நுரையின் நுதம்பலுடன் கூடிய மஞ்சள் கலவை ஒன்று சீப்பில் படிந்திருக்கும். அதை சுத்தப்படுத்துவதற்கு என்றுமே எனக்கு நேரம் இருந்ததில்லை. நாங்கள் என்னதான் பிரயத்தனங்கள் எடுத்தாலும் சோளகக் காற்றும், கோடை காலத்தில் அள்ளிவீசும் உப்பு மண் காற்றும் எங்களுடைய சிகை அலங்காரங்களைக் குழப்பிவிடும்.

கோப்பாய் சந்தியிலே சிகை அலங்கார நிலையமொன்றுண்டு. நாங்கள் போய்ச்சேரும் அந்த காலை நேரங்களில் முதலாளி அங்கு நிற்பதில்லை. அவருடைய மகன் கோபாலுவே சலூனைத் திறந்து வைத்திருப்பான். அவனுக்கும் கிட்டத்தட்ட எங்களுடைய வயதுதான் இருக்கும். கைதடியில் இருந்து வரும் எங்களுக்கென்று சலூனில் ஒரு சீப்பு வைத்திருப்பான். உப்புமண்ணும் நல்லெண்ணையும் சொடுகும் சேர்ந்த ஒருவகை கலவை அந்த சீப்பு பற்களின் அரைப் பகுதியை அடைத்திருக்கும். அதுபற்றி நாங்கள் என்றுமே கவலைப்பட்டது கிடையாது. சலூனில் தலை வாரிய பின் அங்குள்ள ‘புசல்மா’ பவுடரில் கொஞ்சம் எடுத்து பூச கோபாலு அனுமதிப்பான். வேர்வை அப்பிய முகத்தில் பவுடரை பூசிக்கொண்டு சேட் கொலரையும் கை மடிப்புகளையும் சரி செய்தால், நாம் வகுப்பறைக்கு போக ‘றெடி’ என்று அர்த்தம்.

கோப்பாய் சந்தியில் கிடைத்த இந்த அலங்கார வசதிகள் அப்பொழுது ஆயத்தடியில் கிடையாது. கைதடி தன் கிராமியத் தன்மையை இழக்காது சோம்பல் முறித்தது. நாவிதர்கள் நடமாடும் சலூனாக கைதடியில் சேவை புரிந்தார்கள். இன்னொரு விசயத்தையும் சொல்லவேணும். கோப்பாயில் வாழும் நாகரீகமான பெட்டைகளின் தரிசனம் கிடைத்த பின் கைதடிப் பெட்டைகள் எனக்கு ‘பிரமிப்பை’ கொடுக்க முடியாத சாதாரணமானவர்களாகத் தோன்றினார்கள். கைதடிப் பெட்டையளை மட்டந்தட்டிய நான் பின்னர் கைதடிப் பெட்டையை மனைவியாகப் பெற்று வாழ்வதை நினைத்து சிரித்துக் கொண்டேன்.

நான் இவ்வாறு நனவிடைதோய்ந்த கொண்டிருப்பது மகனுக்கு அலுப்புத் தந்திருக்கலாம். ‘நாங்கள் வீட்டுக்குப் போவோமா?’ என்று மெதுவாகக் கேட்டான். என் கனவுகளிருந்து என்னை விழித்தெழச் செய்யாத ஒரு பவ்வியம் அவன் குரலே தொனித்தது.

வீட்டை நோக்கி நடக்கத் துவங்கினோம். வீதியோரத்தில் உடைந்துபோய் நாதியற்றுக் கிடந்த சீமந்து வாங்கு தெரிந்தது. அதன் அருகே நெளிந்து வளைந்த இரும்புக்குழாய் ஒன்று மண்ணுக்குள் புதைந்தும் புதை யாமலும் தெரிந்தது. அந்தக் காலத்திலே அது பஸ்தரிப்பு நிலையத்தை அடையாளப்படுத்தியது. பஸ்ஸுக்காக காத்திருப்பவர்கள் சற்றே காலாறி அமர்வதற்காக அந்த சீமெந்து வாங்கு அங்கு போடப்பட்டிருந்தது. என்ன காரணமோ அந்த சீமெந்து வாங்கையும் பூமணி ரீச்சரையும் என்னால் பிரித்துப் பார்க்க முடிவதில்லை. அசோகவனத்திலே ராமபிரானை நெஞ்செல்லாம் தியானித்து, அந்த மிதிலையின் ஜானகி தவமிருந்த காட்சியை என் ஐயா, கோவில் புராணத்துக்கு பயன் சொல்லும்போது உபகதையாகக் கூறக் கேட்டிருக்கிறேன். அந்த சீமெந்து வாங்கிலே ஏகாங்கியாக பூமணி ரீச்சர் எதற்காக தவமியற்றினார்?

சட்டென்று அந்த தவக்கோலமும் அதனால் ஏற்பட்ட சலசலப்புகளும் என் நெஞ்சிலே.,

பாலத்தின் கீழே ஓடும் நீரிலே கல்லை விட்டெறிந்தால் அலைகள் வட்டமாக மிதக்குமே, அதுபோல.

அவை எங்கே செல்கின்றன?

பூமணி ரீச்சர் பற்றிய நினைவுகள்!

(08ஆம் பக்கம் பார்க்க)

# தவக்கோலங்கள் ....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

கைதடியிலே புதிதாக ஒரு ஆரம்பபாடசாலையைத் திறந்தார்கள். அந்த பாடசாலை ஒடுக்கப்பட்ட மக்களுடைய கல்வி முன்னேற்றத்துக்காகக் கட்டப்பட்டதாக பேசிக்கொண்டார்கள். ஆனால் அந்தப் பாடசாலையில் உள்ளூர் ஆசிரியர்கள் யாரும் படிப்பிக்க விரும்பவில்லை. சைக்கிள் உழக்கி வெகுதூரம் போகத் தயாராகஇருந்தவர்கள்உள்ளூர்பாடசாலையைபுறக்கணித்த காரணமும் புரிந்தது. சாதி மான்கள் அந்த சாதனையைப் பெருமையாகக் கூறித்திரிந்ததை இப்பொழுது நினைக்க கூச்சமாக இருக்கிறது. ஐந்தாம் வகுப்பு வரையுள்ள அந்தப் பாடசாலையிலே மொத்தம் இரண்டு வாத்திமாரே. தலைமையாசிரியர் பதவிக்காக யோசெப் மாஸ்டர் வந்து போனார். அவர் சைக்கிள் ஒரு நடமாடும் வீடுபோல. அவருக்கு தேவையான அனைத்து வசதிகளையும் அந்த சைக்கிள் அவருடன் சுமந்து திரிந்தது. யோசெப் மாஸ்டர் வரும் நேரமே பாடசாலை துவங்கும் நேரம் என்கிற ரீதியில் சகல வல்லமை பெற்றவராக அவர் அந்தப் பாடசாலையை நடத்தினார். அங்கு படிக்கும் பிள்ளைகளுடைய பெற்றோர் சிலருடன் அறிமுகம் வைத்துக் கொண்டு, யோசெப் மாஸ்டர் இல்லாமல் அந்தப் பாட சாலையை நடத்தமுடியாது என்ற எண்ணத்தை அங்கு நிலை நாட்டிவிட்டார். அந்தப் பாடசாலையின் உதவி ஆசிரியராக கோப்பாயிருந்து பூமணி ரீச்சர் வந்து போனார். அரசாங்கம் கொடுக்கும் பணிஸ் விநியோகத்துடன் அந்தபாடலை முடிவடையும். எப்படியும் ஆடிப்பாடி யோசெப் மாஸ்டர் இரண்டு மணிக்குத்தான் பாடசாலையை மூடுவார். பூமணி ரீச்சர் ஆயத்தடி பஸ் தரிப்புக்கு வருவதற்கு அரைமணி நேரத்துக்கு முன்னர்தான் மானிப்பாய் நோக்கி பஸ் சென்றிருக்கும். அந்த பஸ் கோப்பாய் பாலம் வழியாக மானிப்பாய் சென்று திரும்பவும் கோப்பாய் வழியாக ஆயத்தடி தாண்டி சாவகச்சேரி சென்று மீண்டும் திரும்ப, நாலரை மணியாகிவிடும். அதுவரை பூமணி ரீச்சர் அந்த சீமெந்து வாங்கில் தவம்கிடப்பார். அப்போது நாமும் பாடசாலை முடிந்து கோப்பாயிருந்து பாலத்தூடாக ஆயத்தடி வந்து சேர்வோம். பாலத்தில் வீசும் உப்புக் காத்துக்கெதிராக சைக்கிள் மிதித்து களைத்துவரும் எமக்கு சீமெந்து வாங்கில் தனித்திருக்கும் பூமணி ரீச்சரை கண்டால் உற்சாகம் பிறந்துவிடும்.

பூமணி ரீச்சர் வடிவு என்றுதான் சொல்ல வேணும். அதிகமான பூச்சுமினுக்குகள் நாடாதவர். அமைதியானவர். 'நல்லாப் படிப்பிக்கிற ரீச்சர்' என்று ஊரில் எல்லோரும் சொல்வார்கள். இருப்பினும் அவரது முகத்தில் எப்போதும் ஒருவகைச் சோகம் எட்டிப் பார்க்கும். பாடசாலையால் நாங்கள் திரும்பி வரும்போது பூமணி ரீச்சர் அந்த வாங்கிலே பஸ்ஸுக்கு காத்திருப்பது எமக்கு தூரத்திலேயே தெரிந்துவிடும். குனிந்த தலை நிமிராமல் புத்தகக் கட்டும் கையுமாக, தனித்து அவர் சீமெந்து வாங்கில் இருப்பதை பார்க்கும்போது 'அவரை கிண்டல்செய்தால்என்ன?' என்றஎண்ணம்தோன்றும்.

ஊர்ப் பெரிசுகள் மத்தியிலே அப்போது கசிந்த ஒரு கதை என் செவிகளிலே விழுந்தது. பூமணி ரீச்சர் ஒருமுறை எங்கள் வீட்டுக்கு ஐயாவைப் பார்க்க வந்து போன பிறகுதான் எல்லாவற்றையும் கோர்வைப் படுத்தி விளங்கிக் கொண்டேன். யோசெப் மாஸ்டர் கண்டிப்பான தலைமை வாத்தியார் என்று ஊருக்கு காட்டிக் கொள்வார். தன்னுடைய மனைவி தீராத வருத்தக்காரி என்றெல்லாம் சொல்லி பூமணிரீச்சரின் அநுதாபத்தினைப் பெற்று தனக்கு சாதகமாக்கும் திட்டம் போட்டிருக்கிறார். பாடசாலை முடிவதற்கு முக்கால் மணி நேரத்துக்கு முன் போய், பஸ்ஸை பிடிக்கும் படியும், ரீச்சரின் வகுப்புக்களை தான் பார்த்துக் கொள்வதாகவும் சில நாட்கள் சலுகைகள் கொடுத்துப் பார்த்தார்.

'உந்த 'எளிய' வீட்டுப் பொடியள் படிச்சென்ன உத்தியோகம் பார்க்கப் போகுதுகளோ?' எனக்கூறி வகுப்பு நேரங்களிலே அதிகம் கஷ்டப்பட வேண்டாம் என்றும் சொல்லிப் பார்த்தார். பூமணி ரீச்சரோ இவை ஒன்றுக்கும் அசைந்து கொடுக்கவில்லை. 'இதுபடியாது' என்பதை புரிந்து கொண்ட யோசெப் மாஸ்டர் பூமணி ரீச்சரை வதைக்க துவங்கினார். ஒன்றரை மணி பஸ்ஸை தவற விட்டு ஆயத்தடியில் அடுத்த பஸ்ஸுக்கு நாலரை மணி மட்டும் காத்திருக்கும் விதமாக பாடசாலை மணி அடிக்கத் துவங்கினார். அப்பொழுதும் பூமணி ரீச்சர் எந்தவித முணுமுணுப்புமின்றித் தன் கடமையை ஆற்றினார்.

பூமணி ரீச்சருக்கு பலாலி ஆசி ரிய பயிற்சி கல்லூரியில் கணித பாடத்திலே விசேட பயிற்சி பெறுவதற்கு அனுமதி கிடைத்திருந்தது. இது சம்மந்தமாக ஐயாவின் ஆலோசனை கேட்பதற்கு இரண்டாம் முறை வீட்டுக்கு வந்திருந்தார். ஐயாவுக்கு பல்வேறு விட யங்களைப் பற்றியும் ஆலோசனை சொல்லும் தகமை இருந்தது என்று ஊர்மதித் ததுதான் இதற்கு காரணம். பூமணி ரீச்சர் கைதடிக்கு படிப்பிக்க வந்து போன காலங்களில் யார் வீட்டுப் படலையும் திறந்தது கிடையாது. இரண்டு முறை எமது வீட்டுக்கு வந்து போனதை பக்கத்து வீட்டு விதானையார் மாமி கண்டிருக்கிறார். அவவுக்கு எப்பொழுதும் கழுகுக் கண்கள். இருப்பினும் மாமியை உச்சிப் போட்டு விதானையார் மாமா ஊர் எல்லாம் மேய்ந்து திரிவார். இதனால் மாமி இந்த விசயங்களில் ஊர் ஆம்பிளையளை என்றுமே நம்பினது கிடையாது. மாமி சாதாரணமாக வீட்டால் வெளிக்கிடுவது குறைவு. பூமணி ரீச்சர் வந்து போன அன்று மாலை மாமி எங்கள் வீட்டுக்கு வந்தது இதற்காகத்தான். பலதும் பத்தும் ஊர்க் கதைகள் பேசியபின் ரீச்சர் பற்றிய கதையை துவங்கிய மாமி, ஆண் வர்க்கத்தையே ஒரு பாட்டம் திட்டித் தீர்த்தார். இறுதியில் 'நீயும் கவனமாக இரு' என அம்மாவையும் எச்சரித்து, தன் கதையை முடித்தார். அம்மாவுக்கு மாமியின் பெலவீனம் நன்கு தெரியும். பூமணி ரீச்சர் பற்றிய சகல விபரங்களையும் மாமிக்கு கூறும் போது நான் படிப்பது போன்று பாசாங்கு பண்ணி கேட்டுக் கொண்டிருந்தேன்.

'நல்ல குணமான பெட்டை. அதின்ரை தலைவிதி இன்னும் கயாணம் கட்டாமல் இருக்குது. தகப்பன் முந்தி இவரோடை கோப்பாய் தமிழ் றெயினிங் கொச்ஸிலை ஒண்டாய் படிச்சவராம். அந்தாள் பாரிசவாதம் வந்து செத்துப் போச்சு. பெட்டைக்கு இப்ப முப்பத்தெட்டு வயதாகுது' என அம்மா 'உச்சு'க் கொட்டி நிறுத்தினார்.

'பெட்டைக்கு சகோதரங்கள் ஒண்டுமில்லையே?' என மாமி விடுப்பு புடுங்கினார்.

'தம்பிக்காறன் ஒருத்தன் இருக்கிறான் குடிகாரன். வேலை வெட்டி இல்லாமல் சொத்தை வித்து குடிச்சுக் கொண்டு திரியிறானாம். தமிழ் வாத்தியார் எண்ட படியாலை தானே கண்ட நிண்ட பள்ளிக்கூடங்களுக்கு எல்லாம் தூக்கி அடிக்கிறாங்கள். அதுதான் பெட்டை கெட்டித்தனமாய்ப் படிச்சு 'மற்ஸ்'றெயினிங் போக இடம் கிடைச்சிருக்கு. ஸ்பெசல் றெயினிங்குக்கு போய் வந்தால் பெரிய பள்ளிக் கூடங்களிலை படிப்பிக்கலாமெண்டு பார்க்குதாக்கும்' என ரீச்சர் பற்றிய வர்த்தமானத்தை சொல்முடித்தார் அம்மா.

பூமணி ரீச்சர் பற்றிய சகல விபரங்களையும் அறிந்த பின் எனக்கும் அவர்மீது ஒரு மரியாதை ஏற்பட்டது. ஆனாலும் ஒரு நாள் பேய்த்தனமான உசாரிலே முப்பத் தெட்டு வயதாகியும் ரீச்சர் இன்னமும் கயாணம் கட்டாத சங்கதியை பெடியள் மட்டத்திலே அவிட்டு விட்டேன். 'அப்படியோ சங்கதி' என கவனமாக வியத்தை உள்வாங்கிக் கொண்டான் பாலன்.

பாலனுக்கு அவனுடன் படிக்கும் கோப்பாய் பெட்டை ஒன்றிலே கண். அதற்காக அவன் படாத பாடில்லை. உடுப்புகளை சலவை செய்து மினுக்குவதிலும் விதம் விதமாக தலையை இழுத்து 'ஸ்டைல்' செய்வதிலும் அதிக நேரம் செலவழிப்பான். பாலன் எவ்வளவு தான் திருகுதாளங்கள் செய்து முயன்ற போதிலும் பெட்டை பாலனை என்றுமே திரும்பி பார்த்ததில்லை. ஒரு தலைக் காதல் உச்சிவரை ஏறியதால் அவன் வெறிகொண்டு அலைந்தான்.

ஒருநாள் கணிதவாத்தியார் கஷ்டமான கணக்கை கரும்பலகையில் எழுதினார். கணக்கில் கெட்டிக்காரனான பாலனால் மட்டுமே அந்தக் கணக்கை செய்ய முடிந்தது. அன்றைக்கு அந்தப் பெட்டை பாலனைப் பார்த்து அருட் பார்வை ஒன்றை வீசிவிட்டாள். இதனால், அன்று பின்னேரம் தலைகால்புரியாத சந்தோசத்தில் எங்களுடன் சைக்கிளில் வந்து கொண்டிருந்தான். ஆயத்தடியில் பூமணி ரீச்சர் வழக்கம் போல் வாங்கில் அமர்ந்திருந்தார். தன்மயமான நினைவுகளிருந்து விழிப்படைந்து சடுதியாக 'தனிமையிலே இனிமை காணமுடியுமா?' என்ற சினிமா பாடலை பாலன் ராகம் இழுத்துப் பாடத்துவங்கினான். அவனுக்கு ஒரு கொம்பனி கொடுக்கும் நட்புணர்விலேயும் பாடுவதிலே நான் பாலனுக்கு சளைத்தவன் அல்ல என்கிற எண்ணதிலேயும் பாடலின் அடுத்தவரியை நான் பாடி முடித்தேன்.

அடுத்த நாளும் அதே பாடலை அதே சந்தர்ப்பத்திலே பாடியதை தற்செயல் என்று சொல்லமுடியுமா?

மூன்றாம் நாளும் பாலன் 'தனிமையிலே இனிமை காணமுடியுமா' எனப் பாடத்துவங்கினான். ஓர் உள்ளுணர்வால், நான் பூமணி ரீச்சரின் திசையிலே பார்த்தேன். அவர் முகத்தை பொத்தி குலுங்கி அழுவது தெரிந்தது.

நான் வீட்டுக்குள் நுழைந்து சைக்கிளை நிற்பாட்டியதும் 'உன்ரைமகன் ஆயத்தடியிலே பாட்டுக் கச்சேரி நடத்திப் போட்டு வாறாராக்கும்' என்று அம்மாவுக்கு குத்தல்கதை சொன்னவாறு ஐயா என்னைப் பிடித்துக் கொண்டார். 'செல்போன்' இல்லாத அந்தக் காலத்தில் ஆயத்தடியில் நடந்தது எப்படி ஐயாவுக்கு போனது என்பதை நான் அறியேன். ஐயாவின் கையில் இருந்த துவரந்தடி என் உடம்பில் துள்ளி விளையாடியது. என் தொடை வழியாக சிறுநீர் கழிந்த பின்பே ஐயா அடியை நிப்பாட்டினார். சிறிது காலத்தின் பின் அந்த வாங்கு வெறிச்சோடிக் கிடந்தது. பூமணி ரீச்சர் பலாலி றெயினிங் கொலிச்சிலே படித்துக்கொண்டிருக்கிறா எனக் கேள்விப்பட்டோம்.

இதற்கு பல வருடங்களின் பின், நான் ஜேர்மன் பல்கலைக்கழகத்திலே படித்துக் கொண்டிருக்கிற காலத்தில், யாழ்ப்பாணத்தின் பிரபல கல்லூரியொன்றிலே பூமணி ரீச்சர் படிப்பிப்பதாகவும் அற்புதமான கணக்குரீச்சர் என மாணவர்கள் புகழ்வதாகவும் ஜேர்மனிக்கு அகதியாக வந்து சேர்ந்த என் பள்ளித் தோழன் துரையன் சொன்னான். இப்பொழுதும் அவர் குடும்ப பந்தங்களுள் ஈடுபடாது மாணவ உலகில் அறிவுச்சுடர் ஏற்றுபவராகவே வாழ்ந்து கொண்டிருப்பதாகவும் புகழ்ந்தான்.

சடுதியாக பூமணி ரீச்சரின் உருவம் என் உள்ளத்திலே விஸ்வரூபம் கொள்ளலாயிற்று. இப்பொழுது பூமணி ரீச்சர் இருக்கிறாரா?

பழைய நினைவுகளிலே மிதந்து கொண்டிருந்த நான், யதார்த்தத்தை மறந்து விட்டேன் போலும். என் மனைவியும் என் உறவினர் ஒருவரும் எம்மைத் தேடி வண்டியில் ஆயத்தடிக்கு வந்தார்கள்.

'ஆமிக்காறன்கள் உலாவிற இடத்தில, வளர்ந்த பெடியனையும் வைச்சுக்கொண்டு என்ன செய்யிறியள்? சும்மா வெளிப்பார்வைக்குத் தான் அமைதி. உள்ளுக்கை இன்னும் புகைஞ்சு கொண்டுதான் இருக்கு' என்று உறவினர் கண்டித்தார். மனைவி பொங்கி வந்த அழுகையை மறைத்தாள். எனக்கு தர்மசங்கடமாகி விட்டது. எதுவும் பேசாமல் வண்டியில் வீடுபோய் சேர்ந்தோம். மறுநாள் உறவினரை அழைத்து பூமணி ரீச்சர் பற்றி விசாரித்தேன். உறவினருக்கு என்வயது தான். விவசாயி. ஊரை விட்டுப் போகாமல் நாட்டுப் பற்றோடு வாழ்பவர். ஊரில் நல்லது கெட்டது எல்லாவற்றிற்கும் முன்னின்று உதவி செய்பவர்.

'அந்த பூமணி ரீச்சர் இப்ப கைதடியிலை தான் இருக்கிறா. அவ பென்ன் எடுத்து கனகாலம். ரத்வத்தை நடத்திய யாழ்ப்பாண படையெடுப்போடை கோப்பாயிலையுள்ள வீடுகளில் பெரும்பகுதி அழிஞ்சுபோச்சு. கைதடி பழக்கப்பட்ட ஊரெண்டு இங்கைதான் வந்தவ. வன்னிக்கு போகேலாமல் அல்லோலகல்லோலப்பட்டு சனம் கைதடிக்கு வர அனாதை குழந்தைகளுக்கு ஒரு ஆசிரமம் துவங்கினவ. ஊர்ச்சனம் எல்லாம் அவவுக்கு நல்ல சப்போட்டும் மரியாதையும். அனாதைகளுக்கு மறுவாழ்வு அளிக்கிற ஒப்பற்ற சேவை. உண்மையாய் நீங்கள் அதை ஒருக்கா போய் பார்க்க வேணும். பூமணி ரீச்சர் அந்த ஆசிரமத்தை கைலாயம் போலத்தான் நடத்திக் கொண்டிருக்கிறார். அவவிடம் படிச்ச 'பெடியள்' வெளிநாட்டிலை இருந்து நிறைய நன்கொடை அனுப்பி வைக்கினம். வாறகாசிலை ஒரு சதமும் அவம் போகாமல் பிள்ளையளுக்கு சிலவழிக்கிறா' என தெட்டம் தெட்டமாக பூமணி ரீச்சர்பற்றிய சகல விபரங்களையும் உறவினர் சொல்முடித்தார். அவர் சூட்டிய புகழாரம் உண்மைதான் என்று ஊரே ஒப்புக்கொள்வதை அறிந்து மகிழ்ந்தேன்.

அன்று மாலை குடும்பத்துடன் பூமணி ரீச்சரின் ஆசிரமத்துக்கு சென்றேன். தன்னலமற்ற சேவையால் அந்த ஆசிரமம் மிகச் செழுமையாக இருந்தது.

பூமணி ரீச்சர், என்னை உடனடியாக அடையாளம் காணவில்லை. வாத்தியாரின் மகன் என அறிமுகம் செய்ததும் மகிழ்ச்சியுடன் வரவேற்றார். அவரது தலை நரைத்திருந்தது. முதுமை தலை காட்டியது. இருப்பினும் அந்தக் கண்களிலே அன்று பார்த்த அதே நேசம் தேங்கியிருந்தது.

'தம்பி, நீங்கள் முதலிலை ஜேர்மனியிலும் இப்ப அவுஸ்ரேலியாவிலும் வாழ்வதாகக் கேள்விப்பட்டேன்.'

நான் இலேசாக சிரித்தேன். என் மனைவி ஆசிரமத்துக்கு மகன் பெயரில் வருடாவருடம் அவனது பிறந்த நாளையொட்டி நன்கொடை அளிக்க வேண்டுமென்ற தீர்மானத்துடன் வந்திருந்தாள். ரீச்சரிடம் விபரம் கூறி பணம் கொண்ட கவரை கையில் கொடுத்தேன்.

'மகன்ரை வயதில உம்மை அப்ப கண்டது. உம்மைப் போலத்தான் துருதுருவென்று இருக்கிறார்' என்று கூறிச் சிரித்தார். மனித நேயம் செழித்து வளரும் அந்த ஆசிரமத்திலே கொஞ்சநேரம் பூமணி ரீச்சருடன் இருந்தது நெஞ்சுக்கு இதமாகவும் ஆறுதலாகவும் இருந்தது. புறப்படத் தயாரானோம். ஆசிரமத்தின் வாசல்வரையிலும் ரீச்சர் நடந்துவந்தார். விடைபெறும் பொழுது என் மனைவியின் கையிலே மிகப் பவ்வியமாக நாம் கொடுத்த நன்கொடைக்கான பற்றுச்சீட்டினைக் கொடுத்தார்.

பூமணி ரீச்சர் நடத்தும் அந்த ஆசிரமத்திலே மனித நேயம் மட்டுமல்ல, நாணயமும் தன் நம்பிக்கையுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

(முற்றும்)

(மல்லிகை, செப்டெம்பர் 2003.)

# சொல்லேருழவர்



## கொரோனா..

- பிரியன் -

அவதாரம் எடுக்குது
கொரோனா...
விடாப்பிடியாய்
அடாவடியாய்
தடா சட்டம் போடுகிறது கொரேனா.

யாரடா செய்த பாவமிது
சாபமாய் வந்து சுத்துது .
கட்டுச்சொல்லும் சாமிக்கே
வாயை மூக்கை கட்டுது
குட்டி சாத்தான் போலவே
கட்டம் கட்டி தாக்குது.

இலட்சம் பேர்
உயிர் குடித்து
காட்டேரிகள் போல்
உச்சம் தலைபிடித்து ஆட்டுது
உருவம் இல்லாத சூனியம்
உபாதை தந்து ஆட்டுது
உலகம் அல்லாடிப்போனது

கொண்டாட்டம் இல்லை
தெருக்கூத்து இல்லை
கோயில் கொடியேறி
தேர் ஓட்டமில்லை
மணப்பந்தல் இல்லை
விருந்தாளி இல்லை
வில்லங்கம் வினைக்கும்
ஊர் சாதி இல்லை.
ஊர் உலகம் அடைத்து
பூமி மௌனித்து கிடக்கிறது
தொட்டாலும் தீட்டு
மோர்ந்து பார்த்தாலும் தீட்டு
எட்டடி தூரம்
உறவை எட்டா
தொலைவில் வைத்தது

## எல்லாம் வாழத்தானே பூமி



சாமி தந்த பூமியிது ,என்ன
சாபம் வந்து போனதுவோ
வாழ வழி இல்லை என்று
வாழ்வறுந்து போகுதிங்கே

பூச்சி புழுவும் வாழத்தானே
புல்லும் பூண்டும் விளையிதிங்கே
ஆச்சி அப்பு வாழ்ந்தது போலே – ந(நா)ம்
காடும் மேடும் ஒழியுதே
காக்கை கூடும் அழியுதே
வீடுகளெல்லாம் பெருகுதே
வீதிகள் கூட அகலுதே

காடெல்லாம் நகரமாக
கால்நடைகள் விரயமாக
நாடுகளும் நரகமாகி
நலமற்று போகிறது வாழ்வு
பறவை எச்சங்கள். இன்றி
வன மிச்சங்கள் அழியுது
உண்ண உணவின்றி பல
உயிரினங்கள் உயிரிழந்து போகுதே

நீரும் வற்றிப்போக
நிலமும் புழுதி எழுப்புது
வானம் வாய் திறக்க இங்கு
வனங்களும் வளமிழந்து போச்சு

ஆடு மாடு அலையுதே
ஆனைக்கூட்டம் ஒழியுதே
ஆந்தை கூட அருகுதே
ஐய்யயோ அத்தனையும் வாழத்தானே
பூமித்தாயும் பூத்ததுதானே

காக்கை கூட்டம் கரையா
குயிலும் இங்கு பாடா
சேவல் கூவ செவியும் எட்டா
நாளைய விடியல் எப்படியென்று
நம்மை நாமே கேள்வி கேட்டால்
நலமாய் இங்கு எல்லாம் நடக்கும்
பூமி கூட சுகமாய் சுற்றும்
பூச்சி புழு விலங்கினம் எல்லாம்
விளை நிலம் நோக்கி நகரும்
விடியலும் கூட சுகமாகும்– இனி
விதைகளும் எல்லாம் விருட்சமாகும்.

**றொபின்சியா- பிரான்ஸ்**

## இவள் கருப்பு நிலா



கவிதை இலக்கணத்தின்
வைர முலாம்
கார்கால மேகத்தின் தூறல்
வானவில் வந்திறங்கும்
வண்ணமுகிழ்ச்சோலை.
கருவிழி இரண்டும்
மதி மயக்கும்.
குறுநகை புன்னகையில்
தேன் ஒழுகும்
பார்க்க சலிக்காத முகம்.
பார்த்தாலே மனம் இளகும் தினம்.

ஆத்தாடி இவள் அழகில்
ஐஸ்வரியம் கூடும்.
காற்றாட வரும் தென்றல்
சேர்ந்தாடிப்பழகும்.
கோடி விலை கொடுத்தாலும்
தேடக்கிடையாது
தென்மாங்குக்குயிலுக்கும்
ராகம் புரியாது
வான்பார்த்த மயிலுக்கு
ஆடத்தெரியாது
அம்மாடி சொக்கித்தான்
வானம் நிக்குதே.

கருப்பில் பூவில்லை
அது பூவின் குறையது
கண்மை பூவானால்
வாழ்க்கை கொடியது
நிலவின் அழகுக்கு
இருளே பெரும்பங்கு
சுற்றாத பூமிக்கு
ஏது விடிவெள்ளி
பகலில் குளித்து
இரவில் காயும்
நிலவுகூட இவள்
அழகுக்கு ஈடில்லை

# தேசிய பாடசாலைகள்



இலங்கையின் கல்வி வளர்ச்சி ஏனைய ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி கண்டுள்ளது. அதாவது பேச, எழுத, படிக்கத் தெரிந்த வர்கள் என்ற வரிசையில் இலங்கை முன்னணியில் இருக்கும் நாடாகும். இங்கு பௌத்தம், சைவம், கத்தோலிக்கம், இஸ்லாம் மதங்கள் காணப் பட்டாலும் சிங்களமும் தமிழும்தான் பிரதான மொழி களாகக் காணப்படுகின்றன. இந்த மொழி, சமய வளர்ச்சிக்கு இலங்கை அரசு பெரும் பங்களிப்பை வழங்கி ஊக்குவித்து வருகின்றது. கல்வியை மேலும் வளர்த்தெடுப்பதற்காக தேசிய பாடசாலைகளை மேலும் அதிகரிக்க நடவடிக்கை எடுத்துவருவது சிறப் பான விடையமாகும். அந்த வகையில்...

2019ம் ஆண்டின் தகவலின்படி இலங்கையி லுள்ள 9 மகாணணங்களிலும் தற்போது காணப்படும் தேசியப்பாடசாலைகள்..

**1. மேல்மகாணம் -74**
**2. தென்மாகாணம் - 67**
**3. மத்தியமாகாணம் - 54**
**4. கிழக்குமாகாணம் - 40**
**5. வடமேல்மாகாணம் - 37**
**6. ஊவாமாகாணம் - 36**
**7. சப்பிரகமுவமாகாணம் - 28**
**8. வடமாகாணம் - 22**
**9. வடமத்தியமாகாணம் - 15**

**மொத்தம் 373**

### 1.000 புதிய தேசிய பாடசாலைகள்

இலங்கையின் கல்வி மேம்பாட்டுக்காக இலங்கை கல்வி அமைச்சு எதிர்வரும் காலத்தில் 1.000 புதிய தேசிய பாடசாலைகளை உருவாக்கும் திட்டத்திற்காக தற்போது புதிதாக உருவாக்கத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கையைப் பார்ப்போம். மாவட்ட அடிப்படையில் தமிழர் பிரதேசங்களான வடகிழக்கில் அமையவிருக்கும் புதிய தேசிய பாடசா லைகளின் எண்ணிக்கையைப் பார்ப்போம்..

| மாவட்டம் | -தற்போதுள்ள தேசிய பாடசாலைகள் | -தரமுயர்த்தப்படவுள்ள பாடசாலைகள் | -மொத்தம் |
|---|---|---|---|
| 1-யாழ்மாவட்டம் | 07 | 10 | - 17 |
| 2-கிளிநொச்சி மாவட்டம் | 02 | 02 | - 04 |
| 3-மன்னார் மாவட்டம் | 05 | 03 | - 08 |
| 4-முல்லைத்தீவு மாவட்டம் | 03 | 03 | - 06 |
| 5-வவுனியா மாவட்டம் | 05 | 02 | - 07 |
| 6-மட்டக்களப்பு மாவட்டம் | 13 | 07 | - 20 |
| 7-அம்பாறை மாவட்டம் | 16 | 03 | - 19 |
| 8-திருகோணமலைமாவட்டம் | 11 | 03 | - 14 |
| மொத்தம் | 62 | 33 | - 95 |

**தகவல்:- கல்வி அமைச்சு (தகவலறியும் உரிமை ச்சட்டத்தின் மூலம்)**

### தமிழ்- சிங்களம் மொழியும், பௌத்தம் - சைவநெறி மதமும்

அண்மையில் இலங்கையில் வெளியாகிய கல் விப் பொதுத்தராதர சாதாரண பரீட்சை 2020 முடி வுகளின்படி பௌத்த சமயத்தில் 74.55 வீதம் பேரும் சைவநெறியில் 65.52 வீதம்பேரும் சித்தி பெற் றுள்ளனர். அதே வேளை தாய்மொழியாம் சிங்க ளத்தில் 75.91 வீதம்பேரும் தமிழ் மொழியில் 71.19 வீதம்பேரும் சித்தி எய்தியிருக்கிறார்கள். கடந்த காலங்களின் பெறுபேறுகளையும் பார்ப்போம்.

ஆண்டு - C அல்லது அதற்குமேல் சித்திபெற் றோர் - வடமாகாண தரநிலை.

| | | பௌத்தம் | -சைவநெறி | -சிங்களம் | - தமிழ் | |
|---|---|---|---|---|---|---|
| 2005 | - | 57.9 | -65.11 | -56.84 | -57.28 | - 4 |
| 2006 | - | 63.74 | -61.91 | -55.51 | -59.49 | - 4 |
| 2007 | - | 64.47 | -68.34 | -58.46 | -52.92 | - 3 |
| 2008 | - | 65.71 | -75.23 | -58.31 | -48.14 | - 5 |
| 2009 | - | 59.15 | -86.66 | -48.41 | -43.81 | - 2 |
| 2010 | - | 62.23 | -69.85 | -52.91 | -47.31 | - 6 |
| 2011 | - | -- | -- | -60.30 | -44.69 | - 9 |
| 2012 | - | 72.61 | -86.59 | -67.54 | -52.45 | - 8 |
| 2013 | - | 67.81 | -84.81 | -65.76 | -56.05 | - 6 |
| 2014 | - | 67.38 | -71.07 | -70.88 | -51.41 | - 9 |
| 2015 | - | 76.13 | -64.33 | -72.24 | -53.56 | - 9 |
| 2016 | - | 77.72 | -66.36 | -69.06 | -51.55 | - 9 |
| 2017 | - | 71.30 | -60.96 | -75.00 | -69.06 | - 9 |
| 2018 | - | 72.08 | -66.74 | -76.79 | -71.77 | - 8 |
| 2019 | - | 75.59 | -65.30 | -72.46 | -62.29 | - 9 |
| 2020 | - | 74.55 | -65.52 | -75.91 | -71.19 | - 9 |

(மூலம்..பரீட்சைத் திணைக்களம்)

### குறிப்பு:-

தமிழ்க்கல்வி, சமயநெறி பாடங்களை நோக் கும்போது 2014ம் ஆண்டிலிருந்து 2020 வரை வடமாகாணம் இலங்கையிலுள்ள 9 மாகாணங் களிலும் இறுதி இடமான 9வது இடத்தில்தான் இருந்து வருவது கசப்பான உண்மையாகும். அப்படிப் பார்க் கும் போது இலங்கையின் ஏனைய மாகாணங்க ளின் மொழி, சமயம் அதிக முன்னேற்றம் கண்டி ருப்பது புலனாகியுள்ளது. யுத்தம், அதிக கலாச்சார சீர்கேடுகள், வறுமை, வசதியின்மை எனப் பல கார ணங்கள் அனைத்து மாகாணங்களிலும் இருந் தாலும் வடமாகாணம் ஏன்?..தொடர்ச்சியா இறுதி இடத்தில் இருந்து வருகின்றது என் பது கோள்வியாகவே இருந்து வருகின் றது.

ஆகவே நாட்டிலுள்ள புத்திஜீவிகள், கல்விச்சமூகங்களும் புலம்பெயர் தேசங் களிலுள்ள நலன்விரும்பிகளும் அதிக அக்கறைகொண்டு செயற்பட வேண்டும். இந்தக் கல்வி, விளையாட்டு, கலை கலாச் சார விழுமியங்களை ஊக்குவிக்கும் நோக் கிலேயே எமது தென்மராட்சி சர்வதேச ஒன்றியம் கல்விக்குக் 'கை கொடுப்போம்' என்னும் தாரக மந்திரமாகக் கொண்டு பல நிதி உதவிகளைச் செய்து வந்துள்ளது. தொடர்ந்து இப்படிப்பட்ட பணிகளை மேற் கொண்டு தமிழர் தாயகப் பிரதேசங்க ளின் தமிழ், சமய வளர்ச்சிக்கு அனைவ ரும் உதவிக்கரம் கொடுப்போம்.

நன்றி!

**'மொழியும் மதமும் எம் உயிரெனக் காப்போம்'**

**ஜேர்மனியிலிருந்து வைரமுத்து சிவராசா.**

**கல்விப்பணி - தென்மராட்சி ஒன் றியங்களின் சர்வதேச அமைப்பு - 31.10.2021.**

## சாவகச்சேரியில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் ஜேர் மன் வேள்ட் வின் நிறுவனத் தின் உதவியுடன் சாவகச் சேரியில் செவ ணத்த மற்றும் வேள்ட் வின் நிறுவனங் களால் பின்லா கழிவு முகாமைத்துவச் செயற்திட்டத்தின் கீழ் 18மில்லியன் ரூபாய் ஒதுக்கீட்டில் ஆரம்பிக் கப்பட்டுள்ளது.

மேலும் அடிக்கல் நாட்டு வைபவத்தில் நகரசபை யின் உத்தியோகபூர்வ சட்டத் தரணி, நகரசபையின் உப தவிசாளர் பால மயூரன்,பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தளிர்ராஜ், நகரசபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர் கள் மற்றும் செவணத, வேள்ட் வின் நிறுவனங்களின் அதிகாரி கள் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர். குறித்த மீள் உருவாக்கும் மத்திய நிலை யம் ஊடாக பிளாஸ் டிக், பொலித்தீன் கழிவுகள் அற்ற நகரை கட்டியெழுப்ப எதிர்பார்க்கப்படுகிறது.

## தென்மராட்சி கல்வி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் வி.சு.துரைராசா, சர்வதேச இணைப்பாளர் ஆர். சத்தியசீலன் ஆகி யோரிடம் வழங்கியுள்ளார். அப்பாடசாலை களின் விபரம் பின்வருமாறு –

அப்பாடசாலைகளின் விபரம் பின்வரு மாறு –

1. யா/கைதடிநுணாவில்அ.த.க.பாடசாலை,
2. யா/ கொடிகாமம் அரசினர் வித்தியாலம்,
3. யா/ மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயம்,
4. யா/ மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தி யாலயம்,
5. யா/மட்டுவில்கமலாசினி வித்தியாலயம்,
6. யா/ எழுதுமட்டுவாழ் சிறிகணேசா வித்தி யாலயம்,
7. யா/ மந்துவில் றோ.க.த. பாடசாலை,
8. யா/ கைதடி முத்துகுமாரசுவாமி வித்தி யாலயம்,
9. யா/ அல்லாரை அ.த. வித்தியாலயம்.
10. மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலை.

## சாவகச்சேரி மின்மயான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

5 லட்சம் ரூபா வினை வழங்கி நகரசபை பணிக்கு வலுச்சேர்த்துள் ளார்.

புலம்பெயர் நாடுகளில் வாழும் தென்மராட்சி உறவுகள் பலர் இத்திட்டத்திற்கு உதவ முன் வந்துள்ளனர். நன்கொடையாளர்க ளின் பெயர் விவரம் தென்மர் இதழில் பிரசுரமாகும். உதவி வழங்கு பவர்களின் நன்மை கருதி வங்கி க/கு மற்றும் அது தொடர்பான விவரங்கள் தென்மரில் தொடர்ந்து வெளியிடப்படும்.

கிளிநொச்சி, சாவகச்சேரி, வலிவடக்கு, வலிகிழக்கு பகுதிகளில் கொரோனா நோய் தாக்கத்தின் எதிரொலியாக மின் தகன சுடலை யின் தேவை ஏற்பட்டது.இதற்கான நிதி ஒழுங்குகள் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் செய்ய முடியாத நிலையில் புலம்பெயர்ந்த மக் களின் ஒத்துழைப்புடன் இதனை நடைமுறை படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஒரு மயானம் அமைப்பதற்கு கட்டிடம்,இயந் திர சாதனங்களுடன் இரண்டு கோடியே 40 லட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபை ஒரு கோடி 30 லட்சம் ரூபாவை இலக்கு வைத்தே நனகொடையாளர்களிடம் ஆதரவு கோரிநிற்கிறது.எனவே புலம்பெயர் தென்மராட்சி உறவுகள். இந்த பணிக்கு உதவ வேண் டும் என சர்வதேச தென்மராட்சி ஒன்றியம் அன்புடன் வேண்டுகி றது.




# படப்பிடிப்பு தொழில் துறை வல்லுனராகவலம் வரும் போட்டோ பாலா!



● இதயன்

தாயகத்தில் வாழ்வதற்கான சூழல் அற்றுப்போன நிலையில் உயிரை காப்பாற்ற வந்தவர்களை வாரி அணைத்து வாழ வைத்த நாடுகளில் பிரான்ஸ் முக்கியத்துவம் பெறுகிறது. ஈழ யுத்த நெருக்கடி ஆரம்பமான நாட்களில் நாட்டை விட்டு தப்பிவந்தவர்கள் ஐரோப்பிய மற்றும் ஸ்கன்டினேவிய நாடுகளில் தஞ்சமடைந்தனர்.

இந்த வரிசையில் பிரான்ஸ் முதலிடம் பெறுகிறது. 1990களில் இந்த நாட்டில் அகதி அந்தஸ்து கோரி தஞ்சமடைந்தவர்களில் ஒருவர் தான் போட்டோ பாலா என்று செல்லமாக அழைக்கப்படும் பாலமோகன் சின்னத்தம்பி. புரியாத மொழி ,தெரியாத நாடு முடிவு எதுவும் எடுக்க முடியாத நிலை தடுமாறிய போது தாயகத்தில் வாழ்வாதாரம் தந்த தொழில் போட்டோ பிடிக்கும் கலையை திரும்பி பார்த்தார். 18 வயதில் தனது மைத்துனருக்கு உதவியாக வைபவங்கள், கொண்டாட்டங்கள், நிகழ்வுகளை படம் எடுத்த நாட்களிலே படப்பிடிப்பு வசமானார். அவரது ஆள் மனச் சிந்தனையில் ஆழப்பதிந்தது படப்பிடிப்பு.

சாவகச்சேரி ஜீவனா ஸ்ரூடியோ, கவிதாஸ் ரூடியோ போன்றவற்றில் போட்டோ பிடிப்பு தொழில் நுட்பங்களை, இரகசியங்களை கற்றுக்கொண்டார். முல்லைத்தீவு பிரதேசத்தில் தோளில் தொங்கிய கமராவுடன் வலம் வந்தார்.

1980 களில் தன்னார்வத்துடன் தொலைக்காட்சி ஒளி பரப்புகளை . மட்டுவில், கைதடி, சரசாலை போன்ற இடங்களில் ஸ்ரார் ஒளிபரப்பு சேவை மூலம் மக்கள் ஆதரவைப்பெற்றார். அப்பகுதிகளின் பொழுது போக்கு அம்சமாக இந்த ஒளிபரப்பு சேவை விளங்கியது.

போர்க்கால சூழலில் மக்களுக்கு ஒரு. வரப்பிரசாதமாக இருந்தது. இந்த நாட்களில் புகைப்பட பிடிப்புடன் வீடியோ படப்பிடிப்பிலும் போட்டோ பாலா ஈடுபட்டார்.

தொழில் ரீதியாக படிப்படியாக முன்னேறியவர் பளை பகுதியில் ஸ்ரூடியோ ஒன்றைத்தொடங்கினார். சிறப்பாக இயங்கி கொண்டிருந்த படப்பிடிப்பு நிலையம் 1985காலப்பகுதியில் அங்கு நடந்த வன்செயலின் போது தாக்கி அழிக்கப்பட்டதுடன் படப்பிடிப்பு கருவி உட்பட அனைத்து பொருட்களும் சூறையாடப்பட்டன .கையறு நிலையிலிருந்த போட்டோ பாலா அலைந்து திரிந்து நாட்டை விட்டு வெளியேறினார் .

படப்பிடிப்பாளர் பலருடன் நெருங்கிய தொடர்புகளில் இருந்தவருக்கு புலம்பெயர்ந்த தேசத்திலும் வாழ்வாதாரத்திற்கு படப்பிடிப்பு கலை கைகொடுத்தது. கொண்டாட்டம், நிகழ்வு என எல்லாவற்றுக்கும் ஆஸ்தான படப்பிடிப்பாளராக பாரிஸ் நகரிலும் இன, மத, மொழி பேதமில்லாமல் பாலாவின் கமரா கண்களே அனைத்தையும் படம் பிடித்தன. வெறும் போட்டோ மட்டுமல்ல வீடியோ கமராவிலும் தனது திறமையை வெளிப்படுத்தினார். அவரது விடாமுயற்சியும், தொழில் மீது கொண்ட நம்பிக்கையும் பல உயரங்களை தாண்ட வைத்தது.

பாரிஸ் மாக்கட பொசினியர் என்ற பகுதியில் ஸ்ரூடியோவுக்கு 1999இல் ஒளியேற்றினார். இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக பிரான்ஸின் அழகை அங்கு வாழும் மனிதர்களை அவர்களின் கலை கலாசாரங்களை பதிவு செய்வத்தில் நிகரில்லாமல் போட்டோ பாலா இயங்கி வருகிறார். தென்மராட்சி மட்டுவில் பெற்ற மாமணி போட்டோ பாலாவின் புகழ் எட்டுத்திக்கும் பரவியுள்ளது. பல நாட்டு கலாசார பண்பாடு கொண்டவர்கள் வசிக்கும் பாரிஸ் நகரில் புகைப்பட மற்றும் வீடியோ சம்மந்தமான கண்காட்சிகள் புதிய புதிய கண்டுபிடிப்புகள் தொடர்ச்சியாக நடைபெறும் அப்போதெல்லாம் நேரில் சென்று அவற்றில் கலந்து கொண்டு கற்றுக்கொள்வதில் போட்டோ பாலாவிற்கு அலாதிப்பிரியம் அதனால் தனக்கு தேவையானதை பெற்றுக்கொண்டு நடைமுறை படுத்துவதிலும் வல்லவர். நவீன தொழில் நுட்பத்திற்கேற்ப அவரது தொழில் மாற்றங்களும் இடம்பெறுவதால் தான் அவரால் இன்று வரையும் தாக்குபிடிக்க முடிகிறது.

படப்பிடிப்பு இன்று பல பரிமாணங்களை கண்டுள்ளது. டிஜிட்டல் உட்பட சகலதையும் உள்வாங்கி கொண்டு வெற்றி நடைபோடும் தென்மராட்சி மண்ணுக்கு மாண்பேற்றும் போட்டோ பாலாவை பாராட்டி தென்மர் இன்றைய பிரமுகராக அறிமுகம் செய்வதில் பெருமையடைகிறது.

போட்டோ பாலா தொழில் வல்லுனர் மட்டுமல்ல மனித நேய பண்பும் கொண்டவர். கொரோனா காலங்களில் தொழிலின்றி வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டவர்களுக்கு வலிந்து சென்று உதவிய தாராள பிரபு அவர். தனது வேலைப்பழுவுக்கு மத்தியில் பிரான்ஸ் தென்மராட்சி நிறுவனத்துடன் இணைந்து பணியாற்றுபவர் .

பாரிஸ் நகரில் போட்டோ பாலாவின் தொழிலகத்தில் பல தொழில் நுட்ப வேலைகள் நடைபெறுகின்றன. இதனை நெறிப்படுத்தி வாடிக்கையாளர் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தி செய்யப்படுகிறது. கட் அவுட் பானர்கள், பிறேம் போடுதல் ,அழைப்பு இதழ் காட் செய்தல், போட்டோ படப்பிடிப்பு என பணிகள் நாளாந்தம் பெருகிகொண்டே இருக்கிறது. இதற்கான இயந்திர சாதனங்களும் பொருத்தப்பட்டுள்ளன.

தென்மர் இன்றைய பிரமுகராக வலம் வரும் போட்டோ பாலாவை கௌரவிப்பதில் பெருமையடைகிறோம்.

# எது தான் அறிவு

மனிதா....
மணல் வீடு கட்டவே
விஞ்ஞானம் வேண்டும்
தேனிக்கு எப்படி
இதிகாசம் தெரியும்.
ஆயிரம் அறைகளில்
அழகான கோவில்
பாசுரம் பாடாமல்
எழுந்தது எப்படி?

ஓர் அறிவுள்ள
புத்தீசல் கூட
சிறகுகள் கட்டி
பறப்பது எப்படி?
பகுத்தறிவென்னும்
பழங்கதை பேசும்
மனிதா உனக்கு
சாதியும் மதமும் வந்தது எப்படி?

இனவெறி என்னும்
இருள் சூழ்ந்த அறிவில்
பிற உயிர் மீது அன்பு
இல்லாது போனது எப்படி?
மதம் என்னும் சீற்றம்
யானைக்குத்தான் உண்டு
மனிதா நீயும்
மனிதம் கொல்லும் மிருகமா?

இறைமையை கொல்லும்
நறை குணம் கொண்ட
மனிதா நீயும்
தத்துவம் சொல்வது எப்படி?
புத்தனைப் போல
யேசுவைப் போல
வாழ்ந்தவன் எவனும் இல்லை.
பாவம் ஒன்றில் பழி ஒன்றில்
சுமத்தும் மனிதன்
இறைவன் வடிவில்
வாழ்வது எப்படி?

இறைவன் கூட பழியின் மீட்சி
பாவம் பெருக
அவன் ஆடும் சூழ்ச்சி
அரக்கர் குளத்தின்
ஆசான் அவனே.
அறிவின் அருவாள்
மழுங்கும் போது
பகுத்தறிவை
மறைத்தவன் அவனே
உயிருக்கெல்லாம்
தாயும் அவன்தான்
தாயே சேயை
வஞ்சிப்பது எப்படி?

பகுத்தறிவென்பது
இன்னொரு கண்
மனிதனை மனிதன்
செதுக்கும் உளி
உடைவதும் உதிர்ப்பதும்
அகந்தையும் அறிவும்
அதில் ஞானம் வந்தால்
மனிதன் இறைவன்....






# TIMES IRON WORKS INC.

*Fabricators & Erectors*



## Our Services



Heavy Industrial
Light Industrial
Complex Commercial
Residential Structure
High Rise
Complex Bridges
Structural Steel Design
Structural Steel Fabrication
Structural Steel Erection
Miscellaneous Steel
Staircase and Railings
Steel Buildings Construction
on Site Welding
&
Material sale



## Proud Member

CWB CERTIFIED
cisc

J8 Gormley Industrial Avenue, Stoullville, ON, LOH IGO.

**Tel: 905-888-9696 / Fax: 905-888-9698**

Cell: 416-817-1114/ thoss@timesironworks.com / www.timesironworks.com



ழிம்மவர் மத்தியில் முதல் முதலாக ஆரம்பிக்கப்பட்ட இரும்பு சம்பந்தப்பட்ட சேவைலைள வழங்கக்கூடிய STEEL நிறுவனம் TIMES IRON WORKS INC. இவ் நிறுவனம் STRUCTURAL STEEL MISCELLANEOUS STEEL மற்றும் METAL ROOF DECK ஆகிய சேவைகளை ஒரே கூரையில் கிழ்க்கொண்டு பலதரப்பட்ட நிறுவக கட்டுமாகப்பணியை கீழே குறிப்பிட்டபடி செவ்வனே ஆற்றிவருகிறது.

- •LIGHT AND HEAVY INDUSTRIAL BUILDINGS
- COMMERCIAL COMPLEX
- RESIDENTIAL/CUSTOM BUILT HOMES
- CITY OF TORONTO BUILDINGS
- RECREATION CENTRES, ICE HOCKEY ARENAS
- TORONTO TRANSIT COMMISION:TTC,
- GO STATION
- LCBO, CONVENIENCE STORE

- •UGHT AND HEAVY INDUSTRIAL BUILDINGS
- COMMERCIAL COMPLEX
- RESIDENTIAL/CUSTOM BUILT HOMES
- CITY OF TORONTO BUILDINGS
- RECREATION CENTRES, ICE HOCKEY ARENAS
- TORONTO TRANSIT COMMISION-TTC,
- GO STATION
- LCBO, CONVENIENCE STORE

Times Metals
Sales

TIMES METAL SALES LTD. என்னும் நிறுவனம் அனைத்து கட்டுமானப்பணிகளுக்கும் தேவையான இரும்புச் சட்டங்கள் (COLOUMNS - HSS TUBE, BEAMS, "C" CHANNEL, ANGLE IRON) மற்றும் பல தரப்பட்ட இரும்புப் பாகங்கள் (LINTELS, PLATES, FLAT BARS, THREADED RODS, REBARS) மற்றும் METAL ROOF DECK அனைத்தையும் ஒரே இடத்தில் வாங்கக்கூடிய நிறுவனமாக திகழ்கின்றது.

**Mr. THASS SHAN**
**(PRESIDENT & CEO)**

Tel: 905-888-9696 / Fax: 905-888-9698,
Email : thass@timesironworks.com / info@timesmetalssales.com
Website : www.timesironworks.com / www.timesmetalssales.com